விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 28 திங்கட்கிழமை (12.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

## தேவாலயத்தில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமையால் 108 பேர் பாதிப்பு

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள தேவாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட உணவில் ஏற்பட்ட நச்சுத்தன்மை (ஒவ்வாமை) காரணமாக பாதிக்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.

உணவு ஒவ்வாமை காரணமாக வயிற்றோட்டம் வாந்தியால் பாதிக்கப்பட்டு 108 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன். ஒரு கர்ப்பிணிப்பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டும் மேலும் 37 பேர் வைத் 23

## பிரபாகரனின் மரணத்தால் மனவேதனை அடைந்தேன்

### ராகுல் காந்தி உருக்கம்





(சிங்கப்பூர்)

கடந்த 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தியை தொலைக்காட்சி வாயிலாக நான் அறிந்து அவரின் உடல் கிடத்தப்பட்டு இருப்பதையும் பார்த்தேன் அப் 23

# இலங்கை - இந்திய உறவை பலப்படுத்த வேண்டும்

### மோடி அழுத்தமாக வலியுறுத்தல்



*(டில்லி)*

*இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான உறவை பொருளாதார ரீதியில் மேலும் பலப்படுத்துவது அவசியமானது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.*

*(23ஆம் பக்கம் பார்க்க)*

## ராஜபக்ஷக்களுக்கு தொடர்பு இல்லை - மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டில் பதற்றமான நிலைமை ஏற்படுவதற்கு ராஜபக்ஷக்கள்தான் காரணம் என பொய்யான பிரசாரம் ஒன்றை அரசாங்கத்திலுள்ள சிலர் பரப்ப முயற்சித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23

உள்ளே...
07.03.2018
அன்று
வெளியான
புலமைப்பரிசில்
பரீட்சை மாதிரி
வினாத்தாளுக்குரிய
விடைகள்.

## சீன ஜனாதிபதியாக வாழ்நாள் முழுவதும் ஜின்பிங் தொடரமுடிவு



(பீஜிங்)

சீன ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு முறைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை சீன நாடாளுமன்றமான தேசிய 23

## தேங்காய் பறிக்க ஏறியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தேங்காய் பறிப்பதற்கு மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் நெஞ்சு வலி ஏற்பட்டு மரத்திலேயே உயிரிழந்த பரிதாப சம்பவம் நேற்று வரணிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வரணி இயற்றாலையை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தை 23

## கண்டி சம்பவம்; விரைந்த நடவடிக்கைக்கு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

கண்டி குழப்பநிலை தொடர்பில் சந்தேகநபர்களுக்கு எதிராக இயன்றளவு விரைவில் சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பணிப்புரை



விடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெல்லம்பிடிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது பிரதமர் இதனை குறிப்பிட்டிருந்தார். 23

## முஸ்லிம் வர்த்தகர் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடி நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு காணாமல்போன வர்த்தகர் நேற்று மாலை மட்டக்களப்பு - கல்லடி வாவியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். 23

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கோத்தபாய முடிவு!



(கொழும்பு)

2020 ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடனோ, பசில் ராஜபக்ஷவுடனோ இன்னமும் பேசவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23

## யாழ் - குருசடித்தீவு அந்தோனியார் ஆலய வளாகத்தில் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருசடித்தீவு அந்தோனியார் ஆலய வளாகத்தில்இரண்டு புதிய மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

குருசடித்தீவு அந்தோனியார் ஆலய வருடா 23



## இனவாதத்தை பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை - இராணுவத் தளபதி



(கொழும்பு)

நாட்டின் ஸ்திர நிலையை சீர்குலைக்கும் நோக்குடன் இனவாதத்தைப் பரப்பும் அடிப்படைவாதிகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜென 23

## தொடரும் தாக்குதல்கள்; பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

ஆனமடுவ மற்றும் தர்கா நகர் ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை முஸ்லிம்களுக்கு சொந்தமான ஹோட்டல் மற்றும் வீடொன்றின் மீது இருவேறு பெற்றோல் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

குருநாகல் - புத்தளம் பிரதான வீதியில் ஆனமடுவ நகரில் அமைந்துள்ள மதீனா முஸ்லிம் ஹோட்டல் மீதும், அளுத்கம - தர்கா நகர், அதிகாரிகொடவிலுள்ள 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவளம்மா செல்லையா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 08 - 1934 | 09 - 03 - 2018 |



3ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், இல.25, சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம்மா செல்லையா 09.03.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதி-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் பாசமிகு மனைவியும், சச்சிதானந்தம், சண்முகரெத்தினம், காலஞ்சென்றவர்களான கருணாகரன், இந்திரகுமார் மற்றும் மயில்வாகனம், நகுலேஸ்வரி (மட்/செங்கலடி), இராஜேஸ்வரி, மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினிதேவி, யோகேஸ்வரி, சுலோஜனா தேவி (மட்/செங்கலடி) (சட்டத்தரணி), பத்மாவதி, மகேந்திரன் (மட்/செங்கலடி), மகேந்திரன் (இந்திரன்), எலிசபெத் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா), சத்தியேஸ்வரி (பிரான்ஸ்), சிந்துஜெயன் (பிரான்ஸ்), நிசாந்தி, ரேணு காந்தன், கேமலக்ஷன் (மட்/செங்கலடி), கபில்ராஜ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தாரணி மற்றும் சதுர்சன், கலைமதி (மட்/செங்கலடி), சர்மிலன், அனிஸ்ரா, ஜனகன், யதுர்சன், சகானா (லண்டன்), ரொகாணா (லண்டன்), பாலரிசி (அவுஸ்திரேலியா), ரமேஸ் (பிரான்ஸ்), சஜீந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், றக்ஷிகா, ஹரிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (12.03.2018) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.25, சங்கிலியன் வீதி, நல்லூர்.** (3197) **தகவல்: குடும்பத்தினர்**

## திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 02 - 1969 | 07 - 03 - 2018 |



யாழ்.பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும், வல்லிபுரப்பரியாரி ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி) அவர்கள் 07.03.2018 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம்-மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், இராசதுரை-சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், இராசதுரை தயாளன் (ராஜன் வீடியோ) அவர்களின் பாசமிகு துணைவியாரும், ரமணன் (மொறட்டுவை பல்கலைக்கழகம்), தயாரூடான் (யா/ஹாட்லிக் கல்லூரி), தயாநிதி (யா/ஹாட்லிக் கல்லூரி), கார்த்திகா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (ஜேர்மனி), நித்தியானந்தராசா (டொமினிகுட்டி) (ஜேர்மனி), சிவானந்தராசா (சின்னகுட்டி) (லண்டன்), சம்பத்குமார் (சுகந்தன்) (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உதயா, பாக்கியலட்சுமி, விஜிதா, ஜோதி, இராசேந்திரம், உமாகுமாரி (ஜேர்மனி), உதயணன் (அமரர்), இரங்கநாதன் (உப அதிபர்-ஹாட்லிக் கல்லூரி), விஜயகுமாரி (ஆசிரியர்-யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), குமரன், றஜுசியா (ஜேர்மனி), நித்தியா (அமரர்), நிர்மலன், அபிராமி (மகாலக்ஷ்மி), திருமகள் (வாணி, அவுஸ்திரேலியா B.BA), சாந்தினி (அமரர்), நிசாந்தன் (வைத்தியர்), குகன்யா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கெவின், லாரா, சாரா, சரஸ்கியா, நிவேதன், சிவரூபிதா, சிவத்திரா, சிவானிசா, சிவாசன், சகானா, கிறிஸ்ரினா, சபினா, ஜோஸ்சியா, சுகந்தன், சாருஜா, சோபிகா, கயலக்ஷன், அஸ்விதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமுவேல், சரோன், சொர்வின், மகிஸ், லதுமிர்தன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (12.03.2018) காலை 8.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை, பருத்தித்துறை.**
T.P No:-0776529017 (C-1853)

**தகவல்: கணவர் இ.தயாளன், ராஜன் வீடியோ, ராஜன் என்ரபிறைஸ், பருத்தித்துறை**

## பேஸ்புக், வட்ஸ் அப் மீதான தடை நீடிக்கும்

அவசரகால நிலை நீடிக்கும் வரை சமூக வலைத்தளங்களின் மீதான தடை நீடிக்கும் என உத்தியோகபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களையடுத்தே பேஸ்புக், வட்ஸ்அப், வைபர் போன்ற சமூக வலைதளங்களை இலங்கை தொலைதொடர்புகள் மற்றும் ஒழுக்காற்று ஆணைக்குழு தற்காலிகமாக முடக்கியிருந்தது. 72 மணித்தியாலயங்களுக்கு மட்டுமே இக்கட்டுப்பாடு என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக இவை முடக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

சமூக வலைத்தளங்கள் நேற்றுமுன்தினம் முதல் வழமையாக இயங்கும் என ராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அவசர காலச்சட்டத்தின் கீழ், சமூக வலைத்தளங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் வரையில் சமூக வலைத்தளங்களின் முடக்கம் தொடர வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை நாளை செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சமூகவலைத்தளங்கள் மீது விதிக்கப்படுள்ள குறித்த தடை நாளை இடம்பெறவுள்ள கலந்துரையாடலை அடுத்து நீக்கம் செய்யப்படலாம் என தொலைதொடர்புகள் மற்றும் ஒழுக்காற்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் ஊடாக இனவாத மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே சமூக வலைத் தளங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**Win Repair**
சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:
077 964 8942
(3199)

**மனோதத்துவ வைத்தியம்**
மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)
Dr.P.ஆறுமுகம்
T.P :- 0777 569 205
13.03.2018-22.03.2018 வரை
12 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=
மீண்டும் யாழில்




ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.
தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.
ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.
இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற
தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்
இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
இப்போது நாம் புதிய முகவரியில்
விதுனா லொச்
ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே. 021 722 3409
(சி-1852)

## மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 25/03/2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவத்தை 20/03/2018 ஆம் திகதிக்கு முன் புதுப்பித்துக்கொள்ளவும். புதிதாக அங்கத்தவர்களாக சேருபவர்களும் சேர்ந்து கொள்ளலாம். 20/03/2018ம் திகதிக்கு முன் அங்கத்துவம் பெறுபவர்கள் மட்டும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும். அங்கத்துவப் பணத்தை பாடசாலை அதிபர்/பொருளாளர் /செயலாளர் ஆகியோரிடம் செலுத்த முடியும்.

பழைய மாணவர் சங்கம்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
(சி-1848)

# மரண அறிவித்தல்



## திருமதி கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்-புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்-புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.03.1934 | 11.03.2018 |

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் றோட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளை அவர்கள் நேற்று (11-03-2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ப.கிறிஸ்தோப்பர்-கிறேஸ் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மனுவல் மரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் அருட் சகோதரி மரினா (திருச்சிலுவைக்கன்னியர்), ராஜீவன் (USA), நித்திலா (HUDEC-CARITAS) காலஞ்சென்ற அருட்தந்தை சறத்ஜீவன் மற்றும் சக்திஜீவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)ஆகியோரின் அன்புத்தாயாரும், லூயிஸ் (USA), யமுனா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜன், தேனுஜா, மெறிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று திங்கட்கிழமை (12.03.2018) பிற்பகல் 2.30 மணியளவில் யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் பிள்ளைகள்**
இல.5, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் (சி-1850) 0212226780

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை முழுமையாக மன்னித்துவிட்டோம்

## காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவிப்பு

## 'பிரபாகரனின் மரணத்தால் மனவேதனை'





(சிங்கப்பூர்)

என் தந்தை ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களை நானும், எனது சகோதரி பிரியங்காவும் முழுமையாக மன்னித்துவிட்டோம் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உருக்கமாகத். தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மூன்று நாள் பயணமாக சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

அதில் நேற்றுமுன்தினம் சிங்கப்பூரில் உள்ள ஐஐம் கல்வி நிறுவனத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசினார்.

அப்போது அவரிடம் உங்கள் தந்தையை கொலை செய்தவர்களை நீங்களும் உங்கள் சகோதரியும் மன்னித்து விட்டீர்களா? எனக் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ராகுல் காந்தி அளித்த பதில்.

அரசியலில் நாம் எடுக்கும் தவறான முடிவுகள் நம்மை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் என்பது எனக்கு நன்கு தெரியும். அதன் காரணமாகவே, எனது தந்தையும் கொல்லப்படுவார் என்பது தெரியும். எனது பாட்டி இந்திரா காந்தி கொல்லப்பட்டது போலவே அவரும் கொல்லப்படுவார் என்பது தெரியும்.

எனக்கு 14 வயதாக இருக்கும் போது, என் பாட்டி சுட்டுக் கொல்லப்பட்டார். என்னுடன் பட்மிண்டன் விளையாடியவர்களே எனது பாட்டியை கொலை செய்தனர். அதன் பின் எனது தந்தை தமிழகத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்ய வந்தபோது கொல்லப்பட்டார்.

இந்த இரு சம்பவத்துக்கு பின், என்னைச் சுற்றி காலையும், இரவும் 10 முதல் 15 பேர் காவல் காத்துக்கொண்டு இருக்கும் சூழலில்தான் நான் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

என்னைப் பொறுத்தவரை இந்த பாதுகாப்பு என்பது முன்னாள் பிரதமர் மகன், பேரன் என்பதால் அல்ல. சிறப்பு சலுகையும் இல்லை. இதுபோன்ற சூழலை எதிர் கொள்ள மிகுந்த துணிச்சல் வேண்டும்.

அரசியலில் நாம் தவறான சக்திகளின் விருப்பத்துக்கு ஏற்ப செயற்பட்டு, அதற்கு துணையாக இருந்தால், நிச்சயம் கொல்லப்படுவோம். இது தெளிவாக தெரிந்துவிட்டது.

என் தந்தை கொலை செய்யப்பட்டபின் நானும், எனது சகோதரியும் மனதளவில் மிகுந்த வேதனையில் இருந்தோம். இந்த வேதனை எங்கள் இருவருக்கும் பல ஆண்டுகள் நீடித்தது, மனதளவில் சில நேரங்களில் துயரத்தில் துடித்தோம். (இதைச் சொல்லும்போது கண்கலங்கினார்)

கடந்த 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தியை தொலைக்காட்சி வாயிலாக நான் அறிந்து. அவரின் உடல் கிடத்தப்பட்டு இருப்பதையும் பார்த்தேன். அப்போது என் மனதுக்குள் இரு விதமான எண்ணங்கள் ஓடின.

முதலாவது, பிரபாகரன் கொல்லப்பட்டதை ஏன் இவ்வளவு அசிங்கப்படுத்துகிறார்கள், கொச்சைப்படுத்துகிறார்கள் என்பதும், இரண்டாவது, பிரபாகரனின் குழந்தைகள் என்ன ஆகப்போகிறார்களோ?, அவரின் குடும்பத்துக்கு என்ன கதி ஏற்படுமோ? அவர்கள் மனிதநேயத்துடன் நடத்தப்படுவார்களா? என்ற கவலை எனக்குள் ஏற்பட்டது.

இந்த இரு விடயங்களையும் நான் ஆழமாகப் புரிந்துகொண்டேன். இந்த இரு விடயங்களும் என்னை மிகவும் பாதித்துவிட்டன.

உடனடியாக, எனது சகோதரி பிரியங்காவுக்கு தொலைபேசியில் அழைத்தேன். நம் தந்தையை கொன்ற பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தி கேட்டதும் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். ஆனால், எனக்கு ஏன் மகிழ்ச்சி ஏற்படவில்லை. அது ஏன் என்பது தெரியவில்லை என்றேன்.

அவரும் என்னிடம் எனக்கும் எந்தவிதமான மகிழ்ச்சியும் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.

என் தந்தையை கொலை செய்த குற்றத்தில் சிறையில் இருக்கும் 7 குற்றவாளிகளை விடுதலை செய்ய முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த 2016ஆம் ஆண்டு முடிவு செய்தார். அப்போது காங்கிரஸ் கட்சி கடுமையாக எதிர்த்தது. ஆனால், என்னுடைய சொந்த கருத்தை கூறுங்கள் என்றார்கள். நான் இதில் கூற முடியாது என மறுத்து, இது அரசின் முடிவு என்று தெரிவித்தேன்.

என் தந்த கொல்லப்பட்டதை நினைத்து நானும், பிரியங்காவும் பல ஆண்டுகள் மனதுக்குள் வேதனையில் துடித்தோம். ஆனால், இப்போது என் தந்தையை கொலை செய்தவர்களை நானும், பிரியங்காவும் முழுமையாக மன்னித்துவிட்டோம் என ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார். (சொல்லும்போது கண் கலங்கினார்) (இ-7)

## ஜனாதிபதி மைத்திரி பிரதமர் மோடி சந்திப்பு



(டில்லி)

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டுள்ளார். (இ-7)

## தாமரை மொட்டு பறித்த ஐவர் பலி!

(திருமலை)

திருகோணமலை - நிலாவெளி பெரியகுளத்தில் படகு கவிழ்ந்ததில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 3 ஆண்கள், 2 பெண்கள் உள்ளிட்ட ஐவர் உயிரிழந்துள்ளனர்.

கோவிலொன்றில் பூசை வழிபாட்டிற்காக வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த ஐவரும்தாமரை மொட்டுக்களை பறிக்க முற்பட்ட போதே அவர்கள் பயணித்த படகு கவிழ்ந்துள்ளது.இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## அரிசி மற்றும் மரக்கறிகளின் விலைகள் குறைய வாய்ப்பு

(கொழும்பு)

இம்முறை பெரும் போகத்தில் மரக்கறி மற்றும் நெல் சந்தைக்கு வருவதால் இவற்றின் விலை எதிர்வரும் மாதங்களில் குறைய வாய்ப்பு உள்ளதாக ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 7 மாதங்களுக்குப் போதுமான நெல் அறுவடை தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இம்முறை பெரும் போகத்தில் 23 இலட்சம் மெற்றிக் தொன் அறுவடை எதிர்பார்க்கப்பட்டது.

எதிர்வரும் தினங்களில் திறந்த சந்தையில் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 80 ரூபா வரை குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், தம்புத்தேகம, புத்தளம் ஆகிய பகுதிகளில் இருந்து மரக்கறி கூடுதலாக கிடைக்கப் பெற்று வருகின்றது. மரக்கறியின் விலையில் தெளிவான வீழ்ச்சியும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்ததும் நெல்லின் விலை நிர்ணய விலைக்கு வரும். உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம் ஆகியவற்றின் விலை 80 ரூபாவிற்கும் 120 ரூபா விற்கும் இடைப்பட்ட மட்டத்தில் இருக்கும் என ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## கண்டிக் கலவரம் சர்வதேச சூழ்ச்சி

### விமலின் கட்சி குற்றச்சாட்டு

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் சர்வதேச சூழ்ச்சி என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசம்மில் இதனைத் தெரிவித்தார்.

குறித்த சம்பவமானது எந்தவொரு இனத்தினரின் தேவையின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது அல்லவெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மாத இறுதிக்குள் மீண்டும் அமைச்சரவையில் மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அமைச்சரவை மாற்றங்கள் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை மாற்றங்கள் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில், சுதந் திரக் கட்சியின் அமைச்சரவை மாற்றங்களை இந்த மாத இறுதிக்குள் மேற் கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக சுதந்திரக் கட்சியில் அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்வது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்திற்கு முன்னதாக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கண்டிக் கலவரத்துடன் தொடர்புடைய சகலரும் அடையாளம் காணப்பட்டனர்


(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் நடந்த கலவர சம்பவங்களுடன் தொடர்புடைய அனைத்து நபர்களும்அடையாளம்காணப்பட்டுள்ளதுடன், அவர்களின், சகல தகவல்களும்கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். கலவரத்தை திட்டமிட்டு சிலர் வழிநடத்தியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். பேருவளை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரத்தை விரைந்து கைப்பற்ற நினைக்கும் சிலர் இனவாதத்தை தூண்டி வருகின்றனர்.

கண்டி சம்பவங்களுடன் அரசியல்வாதிகள் சிலருக்கு தொடர்புள்ளது. விசாரணைகள்மூலம்உண்மைகள்வெளிக்கொண்டுவரப்படும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## டி வில்லியர்ஸ் சதம்
# பலமான நிலையில் தென்னாபிரிக்கா



டி வில்லியர்ஸின் அபாரமான சதம் கைகொடுக்க டர்பன் தோல்விக்கு பரிகாரம் தேடும் நிலையில் தென்னாபிரிக்க அணி உள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் 2ஆவது டெஸ்ட் போர்ட் எலிசபெத் நகரில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 243 ஓட்டங்கள் எடுத்தது.

இரண்டாம் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டி வில்லியர்ஸ் (74), பிலாண்டர் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### டி வில்லியர்ஸ் சதம்

நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்சை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு பிலாண்டர் (36) ஆறுதல் தந்தார். கம்மின்ஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய டி வில்லியர்ஸ், டெஸ்ட் அரங்கில் தனது 22ஆவது சதத்தை பதிவு செய்தார். இவருக்கு கேஷவ் மகராஜ் (30) ஓரளவு கைகொடுத்தார். நிகிடி (5) 'ரன்-அவுட்' ஆனார்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 382 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

டி வில்லியர்ஸ் (126) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### வோர்னர் ஏமாற்றம்

பின், 2வது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் (13), ஏமாற்றினார். நிகிடி 'வேகத்தில்' பான்கிராப்ட் (24) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் (11), ஷோன் மார்ஷ் (1) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய உஸ்மான் கவாஜா, டெஸ்ட் அரங்கில் தனது 11ஆவது அரைச் சதமடித்தார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது ரபாடா 'வேகத்தில்' கவாஜா (75) வெளியேறினார்.

இந்நிலையில் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், 2ஆவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்கள் எடுத்து, 41 ஓட்டங்களால் முன்னிலை வகித்திருந்தது. மிட்சல் மார்ஷ் (29), பெய்ன் (5) களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ரபாடா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### 461

இரண்டு ஆண்டுகளுக்கு பின், கடந்த 2017, டிச. 26இல் போர்ட் எலிசபெத் நகரில் தொடங்கிய சிம்பாப்வே அணிக்கு எதிரான 'பொக்சிங் டே' டெஸ்ட் போட்டிக்கு திரும்பிய தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ், கடைசியாக விளையாடிய 10 இன்னிங்சில், ஒரு சதம், 4 அரைசதம் உட்பட 461 ஓட்டங்கள் (53, 65, 35, 20, 80, 5, 6, 71*, 0, 126*) குவித்துள்ளார்.

# பங்களாதேஷுடன் அடைந்த அதிர்ச்சித் தோல்வியிலிருந்து மீளுமா இலங்கை?

## இன்று இந்தியாவுடன் அடுத்த சவால்



முத்தரப்பு 'ரி20' தொடரின் 4ஆவது லீக் போட்டியில் இலங்கை - இந்தியா அணிகள் இன்று மோதுகின்றன. கடந்த போட்டியில் வங்கத்தை தெறித்து ஓடச் செய்த தமிழக சகலதுறை வீரர் விஜய் ஷங்கர், மீண்டும் அசத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இந்தியா, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு 'ரி20' தொடர் நடக்கிறது. இதன் 4ஆவது லீக் போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி முதல் போட்டியில் வீழ்ந்த போதும், பின் பங்களாதேஷை வென்றது. அணித் தலைவர் ரோகித்தான் ஏமாற்றுகிறார். கடந்த 5 'ரி20' போட்டியில் அதிகபட்சமாக 21 ஓட்டங்கள்தான் எடுத்துள்ளார். இத்தொடரின் இரண்டு போட்டியிலும் (0,17 ஓட்.) ஜொலிக்காத இவர், இன்று நம்பிக்கை கொடுத்தால் நல்லது.

### வருவாரா ராகுல்

தோனிக்கு மாற்றாக எதிர்பார்க்கப்பட்ட விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிஷாப் பன்டிற்கு (23,7) இரண்டு முறை வாய்ப்பு கொடுத்தும் கைகொடுக்கவில்லை. இவருக்குப்பதில் லோகேஷ் ராகுலை களமிறக்கி பார்க்கலாம். ஹோலி இல்லாத குறையை ஷிகர் தவான் தீர்க்கிறார். இரண்டு போட்டியிலும் அரை சதம் அடித்து இவர் அணியின் தூணாக திகழகிறார். ரெய்னா, மணிஷ் பாண்டேவின் பங்களிப்பு போதுமானதாக இல்லை.

### பதிலடி தருமா

வேகப்பந்துவீச்சாளர் உனத்கட், இரண்டு போட்டியிலும் சேர்த்து 4 விக்கெட் சாய்த்துள்ளார். ஷர்துல் தாகூர்தான் ஏமாற்றுகிறார். இலங்கைக்கு எதிரான கடந்த போட்டியில் இவர், ஒரே ஓவரில் 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்ததுதான் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இவர் ஓட்டங்களை வாரி வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டும். பாண்ட்யாவுடன் ஒப்பிட்டு பேசப்படும் 'சகலதுறை வீரர் விஜய் ஷங்கர், கடந்த முறை பங்களாதேசுக்கு எதிராக கலக்கினார். இரண்டு விக்கெட் வீழ்த்திய இவர், ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இன்றும் அசத்தினால் வெற்றி எளிதாகும். வாஷிங்டன் சுந்தர் சிறப்பாக செயல்படுகிறார். இவருடன் சகால் இணைவது 'சுழல்' பலத்தை அதிகரிக்கிறது. ஒட்டுமொத்த வீரர்களும் கைகோர்த்தால், கடந்த போட்டியில் இலங்கைக்கு பதிலடி கொடுக்கலாம்.

### இலங்கை எப்படி

இலங்கை அணி கடந்த போட்டியில் பங்களாதேஷிடம் 'அடி' வாங்கியது. 215 ஓட்டங்களை பங்களாதேஷ் அனாயசமாக விரட்டியதால், இலங்கை வீரர்கள் அதிர்சசியில் உறைந்துள்ளனர். இன்று வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ், குசல் பெரேரா அடித்தளம் அமைக்க காத்திருக்கின்றனர். அணித் தலைவர் சண்டிமல் தடை காரணமாக பங்கேற்க மாட்டார். இவருக்குப்பதில் சகலதுறை வீரர் திசர பெரேரா தலைவராகச் செயற்படுவார்.

சமீரா, நுவன் பிரதீப் விக்கெட் வீழ்த்தினாலும், ஓட்டங்களை கட்டுப்படுத்துவதில் கவனம் தேவை. ஜீவன் மெண்டிஸ், குணதிலக 'சுழலில்' நெருக்கடி கொடுக்கலாம்.

### மழை வருமா

போட்டி நடக்கும் கொழும்பு நகரின் இன்றைய வெப்பநிலையை பொறுத்தவரை அதிகபட்சம் 30, குறைந்தபட்சம் 24 டிகிரி செல்சியாக இருக்கும். இரவில் மழை வர 60 சதவீதம் வாய்ப்புள்ளது.

இத்தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் கொழும்பு மைதானத்தின் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக அமைந்தது. இதனால், இன்றும் ஆடுகளம் ஓட்டக்குவிப்புக்கு கைகொடுக்கலாம்.


துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி பி.லிங்கசபேசன்
அவர்களின் அன்புத் தாயார்

மாசிலாமணி
சந்திரமலர்

அவர்கள் இறைபதம்
அடைந்த செய்தி கேட்டு
நாமும் துயரில் பங்கு
கொள்வதோடு
அன்னாரது ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
(C-1858)





துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. K. மோகனரஞ்சன்
அவர்களின் அன்பு மாமியார்

மகேந்திராதேவி
சிவலிங்கம்

அவர்கள் இறைபதம்
அடைந்த செய்தி கேட்டு
நாமும் துயரில் பங்கு
கொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (C-1857)





கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம
அலுவலராக கடமையாற்றும்
செல்வி ந.நதியா அவர்களின்
பாசமிகு தந்தையார்

அமரர்
சின்னையா நடராசா

பிறப்பு:-1937.11.02 இறப்பு:-2018.03.11

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

அன்னாரின் துயரில் பங்குபெறும்:-
பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.
(C-1855)




# பெரும்பான்மையினருக்கு ஆதரவாக இலங்கை அரசு

## ஐ.நா. அதிகாரியிடம் முஸ்லிம் அமைச்சர்கள் முறையீடு; சர்வதேசத்தின் 'அழுத்தத்தை அதிகரிக்கவும் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகளும், பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளை மையமாக வைத்தே செயற்படுகின்றன என, ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அலுவல்களுக்கான உதவிப் பொதுச்செயலாளர் ஜெப்ரி பெல்ட்மனிடம் இலங்கையின் முஸ்லிம் தலைவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

முஸ்லிம்கள் மீது வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், தமது கட்சிக்கு பெரும்பான்மை மக்களின் வாக்கு வங்கி இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் அக்கட்சிகளுக்கு உள்ளதென தாம் எண்ணுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தவிர்க்க இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. உதவிப் பொதுச் செயலாளரை, முஸ்லிம் தலைவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள பிரபல தனியார் விடுதியொன்றில் சந்தித்து அம்பாறை, கண்டி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான மோதல்கள் குறித்து தெளிவுபடுத்துகையில் இவ்விடயங்களைத் தெரிவித்தனர்.

முஸ்லிம்களின் பள்ளிவாசலையும், சொத்துக்களையும் அழிக்கும் நோக்கில் திட்டமிட்டு, குறிவைத்தே இந்த வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாக தெரிவித்த அரசியல் தலைவர்கள், வன்முறைகளின் போது பாதுகாப்புப் படையினர் துரிதமாக செயற்பட்டிருந்தால் தடுத்திருக்கலாமென சுட்டிக்காட்டினர்.

மேலும்ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதும், வன்முறையாளர்கள் தமது கைங்கரியத்தை வெற்றிகரமாக மேற்கொண்டனர் என முஸ்லிம் அரசியல் தலைவர்கள்முறையிட்டனர்.

முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் தமது வாக்கு வங்கியில் சரிவு ஏற்படுமென அரசாங்கத்தின் பிரதான இரு கட்சிகளும் எண்ணுவதாகவும், இந்த மனப்பாங்கு மாற்றியமைக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க ஐ.நா. வலியுறுத்த வேண்டும் எனவும், கைது செய்யப்படாமல் தப்பியிருக்கும் வன்முறையாளர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த ஐ.நா. உதவ வேண்டுமெனவும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும், சட்டத்தைப் பாதுகாக்கும் பொலிஸார் தமது கடமைகளை பாரபட்சமின்றி செய்யும் வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, சிறுபான்மை மக்களுக்கும் பொலிஸார் நீதியாக கடமைகளை மேற்கொள்ளும் பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர்களான றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், கபீர் ஹாஷிம், பைஸர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம் காங்கிரஸின் வெளிவிவகாரப் பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி.ஏ.ஆர்.ஹபீஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (இ-7)

## சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கு அரசு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பதாரர்களுக்கான எழுத்துமூல பரீட்சை, எதிர்வரும் மே மாதம் முதல் கணனிமயப்படுத்தப் படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை செயன்முறை குறித்து போக்குவரத்து திணைக்களத்துக்கு தாம் அறிவுறுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 3ஆம் திகதி கணனிமயப்படுத்தப்பட்ட பரீட்சையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திணைக்கள ஆணையாளர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாளாந்த அடிப்படையில், கணனிமயப்படுத்தப்பட்ட புதிய வினாக்கள் தாமாகவே இயற்றப்பட்டு, முடிவுகளையும் உடனுக்குடன் அறிவிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக மோட்டார்வாகன திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கான மருத்துவ அறிக்கைகளையும் புதிய முறையில் வெளியிடுவது குறித்தும் தாம் அவதானம் செலுத்தி வருவதாக போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான

திருமதி.ஜெயலலிதா துரைசிங்கம்

அவர்களின் பாசமிகு சகோதரரான

அமரர்.

செல்லையா நவரட்ணராஜா



தோற்றம் 23.05.1945 அவர்கள் மறைவு 06.03.2018

06.03.2018 அன்று ஜேர்மனியில் அமரத்துவமடைந்துள்ளார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

(சி-1846)


## இராசி பலன்

12.03.2018

மாசி 28, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு

தசமி பிற்பகல் 12.27 மணிவரை

பூராடம் முற்பகல் 10.41 மணிவரை

சுபநேரம் 12.22-1.52 மணிவரை

இராகுகாலம் 7.52-9.22 மணிவரை

வலவன்

கிரகநிலை: சுக் புத — சூரி — கேது — சனி, செவ், சந் — குரு — ராகு

சந்திராஷ்டமம் மிருகசீரிடம் மாலை 5.12 மணிக்கு மகர-சந்

**மேடம்:** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்:** ஆரோக்கியத்தில் அக்கறை கூடும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை.

**மிதுனம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு

**கடகம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, மருத்துவ செலவுகள் குறையும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பில் பெருமையடைவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபதகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு,சற்பனைமிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** சுப விரயங்கள் கூடும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், திட்ட மிட்ட காரியங்களில் திருப்தியாக செயற்படலாம்,சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன நன்மையுண்டு



எழுத்தாளர் ஆ.முல்லைதிவ்யனின் மொழிபெயர்ப்பு நூலான "தாய்நிலம்" சிறுகதை நூலின் அறிமுக அரங்கு யாழ்.பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை எழுத்தாளர் ஆ.முல்லைதிவ்யன் வழங்க வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக்கொண்டார்.

# தாக்குதலுக்கு இலக்கானவர் பரு.வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

அதிகாலைவேளை தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் நபர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.





நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகாந்தகுமார் (வயது-51) என்பவரே படுகாயங்களுக்குள்ளானார்.

அதிகாலை வேளை வீட்டிற்குள் நுழைந்த நபர் ஒருவர் இவரைத் தாக்கியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

# ஆலயக் கேணிக்கு பாதுகாப்புக் கட்டு

## மரணவிசாரணை அதிகாரி கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி கிராய் பிள்ளையார் கோவில் கேணியினை பாதுகாப்புக் கட்டு அமைத்து பாதுகாப்பானதாகப்பேணுவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனகரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கேணியில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மோட்டார் சைக்கிளுடன் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையினை மேற்கொள்வதற்காக சம்பவ இடத்திற்கு சென்ற அவர் பாதுகாப்பற்ற கேணியினாலே வீதியில் சென்றவர் தவறி விழுந்திருக்கக் கூடும் எனக் கருதியதனால் இக் கேணியினை பாதுகாப்பான கேணியாகப் பேணுவதற்கு வீதிக்கும்கேணிக்கும் இடைப்பட்ட பகுதிக்கு பாதுகாப்பு கட்டு அமைத்து அதனைப் பாதுகாப்பானகேணியாக மாற்றுவதற்கு ஆலய நிர்வாகமோ, அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரோ நடவடிக்கை எருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-50)

# உரும்பிராய் ATM உடைப்பு



(உரும்பிராய்)

பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அருகில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஏ.ரி.எம் (ATM) இயந்திர கூடாரம் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

விசமிகளால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் வெளி கூடாரம் மாத்திரம் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் இயந்திரத்துக்கு சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் குறித்த வங்கியால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ- 9-78-87)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை

07.03.2018 அன்று வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாளுக்குரிய விடைகள்

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 1 | 31. - |
| 2. 2 | 12. 2 | 22. 2 | 32. 3 |
| 3. 3 | 13. 2 | 23. 2 | 33. 2 |
| 4. 2 | 14. 2 | 24. 2 | 34. 2 |
| 5. 3 | 15. 2 | 25. 2 | 35. 2 |
| 6. 1 | 16. 3 | 26. 2 | 36. 2 |
| 7. 1 | 17. 1 | 27. 2 | 37. 1 |
| 8. 2 | 18. 3 | 28. 3 | 38. 3 |
| 9. 2 | 19. 2 | 29. 2 | 39. 2 |
| 10. 2 | 20. 3 | 30. 3 | 40. 2 |

வினாத்தாள் II

1) 1. நிரை நிரையாக 2. நான் 3. கனிகள்
4. மலை+தொடர் 5. பச்சைக்கம்பளம் விரிந்தது
6. நிரை நிரையாக

2) I. இளநீர் II. மழை

3) I. ✓ II. ✓
III. ✓ IV. ✓
V. ×

4) I. உதவி செய்தல் II. ஆபத்தில் கைவிடல்

5) I. வெள்ளிவிழா II. ஆச்சிரமம்

6) பூக்கள் மலருது பார்

7) மனைவி

8) " நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என ஆசிரியர் கேட்டார்

9) தருமம்

10) விடாதே

11) I. Black Board II. Rabbit

12) I. உங்கள் கைகளைத் தட்டுங்கள்
II. தயவு செய்து உங்கள் புத்தகத்தைத் திறவுங்கள்

13) May I come in

14) வகுப்பு


15) ஆப்பி பாசலட்ட யமு

16) சரியாக எழுதியிருப்பின் புள்ளி வழங்குக

17) 20,009

18) 18,27,36,45,54

19) XVI

20) 

21) செங்கோணங்களின் எண்ணிக்கை 2

22) விளிம்பு-9 உச்சி-6

23) 8 பழங்கள்

24) 20cm

25) 3l 300ml

26) 427 ரூபா

27) 50 சதுர செ.மீ

28) 105ரூபா

| | |
|---|---|
| 29) 11 | 30) - |
| 31) 3 | 32) 3 |
| 33) 3 | 34) 1 |
| 35) 2 | 36) 2 |
| 37) 3 | 38) 1 |
| 39) 3 | 40) 2 |

# நடமாடும் சிற்றுண்டிக்கடை கோப்பாயில் தீக்கிரை!



(கோப்பாய்)

வியாபார போட்டி காரணமாக பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அருகில், செல்லத்துரை வீதிக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த நடமாடும் சிற்றுண்டி கடை ஒன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் பகுதியில் இளைஞர் ஒருவர் நடமாடும் சிற்றுண்டி விற்பனை கடை ஒன்றில் தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார். வழமை போல் நேற்று முன்தினம் இரவு 8.45 மணிக்கு தனது விற்பனை நடவடிக்கைகளை முடித்துவிட்டு சென்றுள்ளார்.

பின்னர் அன்றைய தினம் இரவு 11 மணிக்கு நான்கு பேர் கொண்ட குழுவினர் அப்பகுதிக்கு வந்து குறித்த கடைக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளனர். கடை எரிவதையும் அங்கு நின்று வேடிக்கை பார்த்துள்ளனர்.

அப்பகுதியில் தீ வேகமாக பரவுவதை அவதானித்த அயலவர்கள் வெளியே வந்து பார்த்த போது அங்கு நின்றிருந்த குழுவினர் அவ்விடத்தை விட்டு ஓடிச்சென்றுள்ளனர். அதே நேரம் அவ்வழியாக வந்த கோப்பாய் பொலிஸார் குறித்த குழுவினரை துரத்தி சென்ற போது அவர்கள் வேகமாக ஓடி ஒரு வீட்டின் கூரை மேல் ஒளிந்து இருந்துள்ளனர்.

அப்போது அந்த வீட்டார் கூச்சலிட்டதும் இவர்கள் இறங்கி ஓடும் போது பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர். ஏனைய மூவரும் மதில் பாய்ந்து ஓடித்தப்பியுள்ளனர்.

மேலும் தீ வேகமாக பரவியதால் கடைக்கு மேலாக இருந்த தொலைபேசி இணைப்பு வயர்கள் சேதமடைந்துள்ளன. இருப்பினும் அயலவர்கள் பொலிஸார் இணைந்து ஏனைய இடங்களுக்கு பரவாது தீயை அணைத்துள்ளனர். தீக்கிரையாக்கப்பட்ட குறித்த கடையானது கடந்த இரு மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் அடித்து நொருக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீண்டும் மூன்றாவது தடவையாகவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடை உரிமையாளரிடம் கேட்டபோது தொழில் போட்டி காரணமாகவே தொடர்ந்தும் தன்னுடைய கடை மீது இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவரின் வாக்குமூலத்தில் கடைக்கு தீ வைக்குமாறு ஒருவர் கூறியதற்கு அமைய அவரிடம் தாம் பணம் பெற்று இதை செய்ததாக தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-9-78-87)

# சென்னையில் இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட்டு எஸ்.டி.பி.ஐ. போராட்டம்




(சென்னை)

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாதிகள் நடத்திவரும் கலவர தாக்குதலை கண்டித்தும், சிறுபான்மை மக்களுக்கு எதிராக தொடரும் கலவரங்களை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், சென்னை நுங்கம்பாக்கத்தில், உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு எஸ்.டி.பி.ஐ. கட்சி போராட்டம் நடத்தியது.

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மத்திய சென்னை மாவட்ட தலைவர் ஜுனைத் அன்சாரி தலைமையில் நடைபெற்ற இந்த முற்றுகை போராட்டத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில செயலாளர்கள் அமீர் ஹம்சா, ரத்தினம், வர்த்தகர் அணி மாநில தலைவர் முகைதீன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் முகமது பாரூக், ஏ.கே.கரீம் மற்றும் சென்னை மண்டல நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

முற்றுகை போராட்டத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் கே.கே. எஸ். எம். தெகலான் பாகவி. எஸ்.டி.பி.ஐ.கட்சியின் மாநில செயலாளர் உமர் பாரூக் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் கே.கே. எஸ்எம். தெகலான் பாகவி தெரிவிக்கையில், இலங்கையில் அம்பாறை, கண்டி,திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த பேரினவாதிகள் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு வருகின்றன.

கால் நூற்றாண்டு காலமாக ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் நிகழ்த்திய இன அழிப்புக்கு பின்னால் தற்போது சிங்கள பேரினவாத அமைப்புகள் மூலம் அங்கு வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கலவரத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. முன்னர் ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் கையாண்ட இனவெறித் தாக்குதலை, தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் சிங்கள பேரினவாத பௌத்த அமைப்புகள். குடிபோதையில் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக போலியான பிரசாரங்கள் மூலம் பொதுபல சேனா உள்ளிட்ட சிங்கள பேரினவாதிகள் திட்டமிட்டு முஸ்லிம்கள் மீது கலவரத் தாக்குதலை நடத்திவருகின்றனர். இதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் கொடுங்கரங்கள் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிஸ், இராணுவத்தின் முன்னிலையே முஸ்லிம்களின் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்படுகின்றன. இந்த சம்பவத்தில்முஸ்லிம் இளைஞர் ஒருவர் பெற்றோல் குண்டு வீசி கொல்லப்பட்டுள்ளார். பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்ட இராணுவத்தினரின் முன்னிலையிலேயே பௌத்த பேரினவாத புத்த பிக்குகள் கலவரத்தை தூண்டி வருகின்றனர். இந்த சூழலில் இலங்கையில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. எனினும் முஸ்லிம்களுக்கு எதிராக அங்கு வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாத பௌத்த அமைப்பான பொதுபல சேனாவினர் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளுக்குள் ஊர்வலமாக வந்து தாக்குதலை ஆரம்பித்ததும், அரசு ஊரடங்குச் சட்டம் விதித்து முஸ்லிம் மக்களை வீடுகளுக்குள் முடங்கச் செய்தது. ஆண்கள் பள்ளிவாசலிலும், பெண்களும்குழந்தைகளும் வீடுகளுக்குள்சிறைப்படுத்தப்பட்ட பின்னர், ஓர் இடம்கூட விடாமல் தேடிப் பிடித்துத் தாக்கினார்கள் பொது பல சேனா அமைப்பினர். அந்தத்தாக்குதல்கள்பொலிஸார் முன்னிலையிலேயே நடைபெற்றது. நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டனர். தற்போது அதுபோன்றதொரு சூழல் மீண்டும் இலங்கையில் ஏற்பட்டுள்ளது. ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்பிற்கு பிறகு, சிறுபான்மை முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு சிங்கள பேரினவாதிகள் மூலம்வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுள்ளன.

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக தொடரும் இத்தகைய கலவரங்களை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கையில் தொடர்ந்து தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் இனவெறி வன்முறைகளை கட்டுப்படுத்த தவறிய இலங்கை அரசிற்கு ஐ.நாவும், இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளும் அழுத்தம் தந்து இனவெறி வன்முறைகளை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.என தெரிவித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (இ-7)


## ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு விலைக்கழிவு!!!

**சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு எம்மிடமிருந்து விசேட விலைக் கழிவுகளைப் பெற்றிடுங்கள்.**

**அரிஷ்டம்**

தசமூலம்- தேக இளைப்பு, தாது விருத்தியின்மை, பலவீனத்திற்கு
அயயா - மூலத்திற்கும் மலச் சிக்கலுக்கும்
கனகாசவ- இருமல், இழுப்பு வியாதிக்கு
அசோகா - வெள்ளை படுதல், மாதவிடாய்க் கோளாறு, அதிக உதிரப் போக்கிற்கு
கதிரா - கடி, சொறி, தோல் வியாதிக்கு

**தைலம்**

பிண்ட தைலம்- வாதம், சொறி, காலில் உள்ள வெடிப்பிற்கு
மகா நாராயணத் தைலம் - வாதம், பாரிசவாதத்திற்கு
மகா சித்தார்த்த தைலம் - நெஞ்சு வலி, மூட்டு வலி, மூட்டு வீக்கத்திற்கு
Kadahapola மூலரோக சுவய- மூலரோகத்தினால் ஏற்படும் இரத்தப்போக்கு கட்டிகள் தோன்றுதல், மூலம் வெளித்தள்ளுதல், சீதம் போதல், வயிறு உப்பி கடுமையாகுதல், சிறுநீர் மஞ்சளாதல், எரிச்சல், வேதனை போன்றவற்றிற்கு வியத்தகு குணம் தரும் ஔடதமாகும்.

**சூரணம்**

தாளிசாதி- சளி, இருமலிற்கு
அஷ்வகந்தா- பசியின்மை, இழந்த சக்தி மீட்சி, வீரியத்திற்கு

இதுபோன்ற பல நோய்களிற்கான அரிஷ்டம், ஆச்வம், தைலம், சூரணங்கள், கூந்தல் எண்ணெய்களை எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் போது விசேட விலைக் கழிவுகளை இன்று முதல் பெற்றிடுங்கள்.

குறிப்பு: சில்லறையாக வாங்குபவர்கள் மருந்துச் சிட்டையுடன் வரவும்.

தொடர்பு: சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகில்)
தொ.இல: 021 222 2567


# முஸ்லிம் வர்த்தகர் முபாறக் மாயம்!

(காத்தான்குடி)

காத்தான்குடியில் பிரபலமான பாதணிகள் உற்பத்தி நிறுவனங்களின் வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி மனேஜர் லேனில் வசிக்கும் ஏ.எல்.எம். முபாறக் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதணி தொழிற்சாலையின் உரிமையாளரான குறித்த வர்த்தகர் நேற்று முன்தினம் இரவில் இருந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஞ்சந்தொடுவாயிலுள்ள தனது தொழிற்சாலையிலிருந்து இரவு வெளியேறி அருகிலிருந்த உணவகத்தில் தேநீர் அருந்தி விட்டு வெளியேறும் போதே இரவு 7.30 மணியளவில் காணாமல் போயுள்ளார்.

அவர் கடைசியாக அந்த உணவகத்திலிருந்து வெளியேறிய போதே பதிவான சி.சி.ரி.வி. கமரா காணொலியை வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:35 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc, MSc, MBA/ பொறியியலாளர்<br>தொ.இ: B/8332 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 28<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8349 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/8334 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: சூரி செவ் 12 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8351 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc QS/ சொந்ததொழில்<br>தொ.இ: B/8336 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:M Eng/லண்டன்<br>தொ.இ: G/8357 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>தகைமை/தொழில்:A/L/டோகா<br>தொ.இ: B/8337 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.Eng/லண்டன்<br>தொ.இ: G/8358 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567



பணி நயப்பும் பாராட்டும்

55ஆவது அகவையில் ஓய்வுபெறும் சக கிராம அலுவலர்
தங்கவேலு-வதனரூபன்
அவர்களை வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.




அலுவலர்,
சக கிராம அலுவலர்,
சேவை நண்பர்கள். கரவெட்டி.

# கிளிநொச்சியில் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கு அதிகளவு நியமனம்

## வேதனைக்குரிய விடயம் என்கிறார் முன்னாள் எம்.பி.சந்திரகுமார்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக காணப்படுகிறது. பெருமளவான இளம் சமூகம் வேலையில்லா பிரச்சினையால் அதிகளவு பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் கிளிநொச்சியின் பல திணைக்களங்களில் பெரும்பான்மை சமூகத்தின் இளைஞர்,யுவதிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இது கண்டனத்திற்கும் கவலைக்கும் உரிய விடயம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

இளம் சமூகத்தினர் மத்தியில் என்றுமில்லாத அளவுக்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பெரும்பாலானவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சியில் உள்ள பல திணைக்களங்களில் சாதாரண வேலைவாய்ப்புக்களுக்கும் தென்னிலங்கை இளைஞர், யுவதிகள் நியமிக்கப்பட்டு வருவது கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றி காணப்படுகின்ற முன்னாள் போராளிகள் உள்ளிட்ட இளம் சமூகத்தினர் மத்தியில் பெரும் அதிருப்தியையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக நல்லாட்சி அரசின் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் புகையிரத திணைக்களம், வனவளத் திணைக்களம், மின்சார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் என பல திணைக்களங்கள் பெரும்பான்மையின இளைஞர்கள், யுவதிகளால் நிரப்பப்பட்டு வருகிறது. அது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரிய விடயம்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இந்த முக்கிய விடயத்தில் கவனம் செலுத்தாமையும், தமிழ் பிரதேசங்களில் பெரும்பான்மையினத்தவர்கள் வேலைவாய்ப்புகளில் நியமிக்கப்படுகின்ற போது அதற்கு எதிராக நடவடிக்கையில் இறங்காமையும் வருத்தத்திற்குரியது எனவும் அவர் தெரிவித்தார். (2-312)




# இலவச மருத்துவ முகாமும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும்





(பனிக்கன்குளம்)

வவுனியா புவனேஸ்வரி அன்பு இல்லத்தின் மூன்றாம் ஆண்டு நினைவாக நேற்று சாந்தசோலை பிரதான வீதியிலுள்ள நினைவிடத்தில் இலவச கண் மருத்துவ முகாம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. வவுனியா பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தின் பஜனை நிகழ்வுகளுடன் ஆரம்பமானது.

லண்டன் மாநகரின் பிரபல சட்டத்தரணியான ஸ்ரீகாந்தரவினால் உத்தியோகபூர்வமாக நிகழ்வுகள் நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலவச மூக்குக்கண்ணாடிகள், மருத்துவப்பரிசோதனைகள் மேற்கொண்டு வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், வசதியற்ற பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் என்பன புவனேஸ்வரி அன்பு இல்லத்தின் குடும்ப உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா தெற்கு வலய கோட்டக்கல்விப்பணிப்பாளர், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# தேவிபுரம்(அ) பகுதி மக்களுக்கு நடைபெற்ற குறைகேள் சந்திப்பு



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு தேவிபுரம்(அ) பகுதியில் நேற்று மக்கள் குறைகேள் சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டிருந்தார்.

தேவிபுரம்(அ) - பகுதியில் உள்ள செந்தமிழ் முன்பள்ளியில் நடைபெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில் காணிப் பிணக்குகள், வீட்டுத்திட்டம் வழங்கப்படாமை, வாழ்வுடைமைக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறைகள் என்பன மக்களால் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் ரவிகரன் உரையாற்றுகையில்,

உங்களால் முன்வைக் கப்படும் குறைகள் அனைத்தையும் தீர்க்க முடியாவிட்டாலும் பகுதியளவிலான குறைகளை என்றாலும் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மக்களுடன் இணைந்து குறித்த பகுதியில் மிகுந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் நான்கு குடும்பங்களின் வீடுகளை அவர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

மேலும் அம்மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு, அவர்களின் குறைகளுக்கான தீர்வுகளையும் பெற்றுத்தருவதாக தெரிவித்திருந்தார். (2)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(பனிக்கன்குளம்)

முல்லை வலயத்திற்குட்பட்ட கருநாட்டுக்கேணி அ.த.க. பாடசாலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவர்களின் கல்வியை தொடர்வதற்கு அண்மையில் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் மயில்வாகனம் சுரேஷ்தரனின் தலைமையில் குமுழமுனை பிரதேசத்தில் உள்ளூராட்சிசபை தேர்தலில் தமிழரசுகட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றியீட்டியவரும் குமுழமுனை பிரதேச அபிவிருத்தி அமைப்பு தலைவருமான இ.கவாஸ்கரனினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு பாடசாலையின் உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் குமுழமுனை பிரதேச அபிவிருத்திகுழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# குடியிருப்புகளுக்கு மத்தியிலுள்ள மயானம் அகற்றப்படவேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வலியுறுத்தல்

(பனிக்கன்குளம்)

வட்டுவாகல் செல்வபுரத்தில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானம் அகற்றப்படவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பின் தலைவர் க. ஆனந்தகுமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வட்டுவாகல் பகுதியில் செல்வபுரம் கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானத்தை அகற்றுமாறு கோரி அக்கிராம மக்கள் கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நானூறு குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்ற இக் கிராமத்தில், அருகில் அரைக் கிலோமீற்றர் தூரத்தில் கடற்கரையோரமாக மயானத்திற்குப் பொருத்தமான பிரதேசம் இருக்கின்றபோதும், இம் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்திருக்கின்ற மயானத்தை, அயற் கிராமத்தைச் சேர்ந்த சிலர் மரபு என்ற பெயரில் பயன்படுத்த முனைவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

எனவே, வடக்கு மாகாண சபையானது வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்துள்ள, சுகாதாரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பான இத்தகைய மயானங்களை அகற்றுவதற்கான தீர்மானத்தினை நிறைவேற்றி, பிரதேச சபைகளினூடாக அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர். (2-281)

# இரவு நேரங்களில் வர்த்தக நிலையங்கள் உடைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரில் அண்மைய நாட்களாக இரவு வேளைகளில் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி நகரின் கனகபுரம் வீதியில் அமைந்துள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றும் அதற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றும் அண்மையில் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அண்மைய நாட்களாக இவ்வாறு கிளிநொச்சி நகரிலும் சந்தை உட்புறத்திலும் உள்ள பதின்நான்குக்கும் மேற்பட்ட கடைகள் இரவுவேளைகளில் உடைத்து பொருட்கள் களவாடப்பட்டிருக்கின்றன.

வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச்சந்தை ஆகிய இடங்களில், கண்காணிப்புக்கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்ற போதும், இவ்வாறான கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான கொள்ளைச்சம்பவங்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை கைது செய்வதில் பொலிஸார் அக்கறை காட்டவேண்டும் என்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# போரின் வடுக்களை சுமந்துள்ள பெண்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த வேண்டும்

## அமைச்சர் அனந்தி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இனவழிப்பு போரின் வடுக்களை சுமந்து நிற்கும் ஈழத்தமிழ் பெண்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த, கட்சி, அரசியல், சாதி, மத வேறுபாடுகள் கடந்து தன்முனைப்பு நீங்கப் பெற்று ஆண், பெண் வேற்றுமை நீங்கி தமிழர்களாக நாம் அனை வரும் ஒன்றுபட வேண்டும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல் அமைச்சின் சார்பில் "முன்னேற்றத்திற்கான உந்துதல்" என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வானது அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை தலைமையேற்று நடத்தியிருந்த வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் உரையாற்றுகையில்,

பணியிடங்களிலும், பொது வெளியிலும், குடும்ப சூழலிலும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள், துஷ்பிரயோகங்கள், அத்துமீறல்கள், வன்கொடுமைகள் உள்ளிட்ட உரிமை மீறல்கள், இனம், மதம், மொழி மற்றும் நாடுகள் கடந்த நிலையில் அனைத்துலக ரீதியாக காலம் காலமாகவே இடம்பெற்று வருகின்றது.

ஆணாதிக்க சமூகத்தினால் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அத்தனை கொடுமைகளையும் நாம் அனுபவித்து வருகின்றோம். வடக்கு-கிழக்கு பகுதிகளில் சுமார் தொண்ணூறாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளார்கள். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு போரின் காரணமாகவே இந்நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் நாற்பது வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை இராணுவ கட்டமைப்பினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பல்லாயிரக் கணக்கிலான பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை சட்டியில் இருந்து அடுப்பிற்குள் விழுந்த கதையாக அமைந்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரும் போராட்ட முன்னெடுப்புகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது ஒருபுறமாகவும் தமது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை தூக்கி சுமப்பது மறுபுறமாகவும் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் தான் இவ்வாறான பெண்களின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

எங்களுடைய மண்ணில் எத்தனையோ மாணவிகள் அரச படைகளால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இக்கொடூரச் செயலை மேற்கொண்ட இலங்கை அரசபடைகள் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் எவரும் இது வரை தண்டிக்கப்படவில்லை. இக்குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடைய இவர்கள் இன்றுவரை சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆண், பெண் வேற்றுமை நீங்கி தமிழர்களாக நாம் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன் என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் தெரிவித்தார். (2)




# சுகாதார விதிமுறைகளை மீறிய தேநீர்ச்சாலை, மூன்று உணவகங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல்

(மல்லாவி)

மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள மல்லாவி நகரப் பகுதியிலும் மற்றும் துணுக்காய் நகரப் பகுதியிலும் சுகாதார விதிமுறைகளை மீறி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தமை உட்பட பல்வேறு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய மூன்று, உணவகங்களினதும், ஒரு தேநீர்ச்சாலையினதும் உரிமையாளர்கள் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் வழ்க்கு தாக்கல் செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி செல்வநாயகம் - லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவர்களுக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளதாக மல்லாவி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸ் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவி நகர்ப்பகுதியிலுள்ள உணவகங்களின் மீது மல்லாவி பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையிலான அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட இரண்டு, உணவகங்களின் உரிமையாளர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து ஒரு உணவக உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், உணவகத்தின் குறைபாடுகளை சீர்படுத்தி பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆய்வின் பின்னர் உணவகத்தை மீளத் திறக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மற்றைய உணவகத்தின் உரிமையாளர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று, துணுக்காய் நகரப் பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய தேநீர்ச்சாலையின் உரிமையாளர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் அவருக்கு 20, ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய உணவகத்தின் உரிமையாளர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் மேலும் ஒரு தடவை நீதிமன்றத்தில் உணவகங்களின் உரிமையாளர்கள் முற்படுத்தப்பட்டால் வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என நீதிபதியினால் எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (2-15)

# மன்னார் பிரதேச சபை நிதியில் 12 மின்விளக்குகள் திருத்தம்

(மல்லாவி)

மன்னார் நகரப் பகுதிக்கும் தள்ளாடிக்கும் இடைப்பட்ட தலைமன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் சுமார் 02, கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியில் உள்ள மன்னார் பிரதான பாலத்தின் இருமருங்கிலும் கடந்த பல மாதங்களாக ஒளிராது இருந்த மின் விளக்குகளில் மன்னார் பிரதேச சபையின் நிதியொதுக்கீட்டில் 12 மின் விளக்குகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் நகர சபையினால் 6 தெரு மின் விளக்குகளும் மன்னார் பிரதேச சபையினால் 12 தெரு மின் விளக்குகளூடாக மொத்தம் 18 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மன்னார் பிரதேச சபையினால் கடந்த 2015 ஆம் ஆண்டு 15 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் சூரியசக்தி மூலம் இயங்கும் 16 மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த 34 தெரு விளக்குகளில் கடந்த பல மாதங்களாக மின்சாரம் மூலம் இயங்கும் 12 மேற்பட்ட தெரு விளக்குகளும் சூரியசக்தி மூலம் இயங்கும் 9 தெரு விளக்குகளும் செயலிழந்து போன நிலையில் இருந்தன.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினரும் இரண்டு சபைகளின் நிர்வாகத்திற்கும் சுட்டிக் காட்டியதுடன் மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போதும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இந் நிலையில், மன்னார் பிரதேச சபையினால் பொருத்தப் பட்டிருந்த 12 மின்சாரம் மூலம் இயங்கும் தெரு விளக்குகளும் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு ஒளிர விடப்பட்டுள்ளன.

இதேபோன்று மன்னார் பிரதேச சபையினால் பொருத்தப்பட்டு தற்போது செயலிழந்துள்ள சூரிய சக்தி மூலம் இயங்கும் 9 தெரு விளக்குகளையும் புனரமைப்பு செய்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பிரதேச மக்களும், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கையை இரண்டு உள்ளூராட்சி சபைகளிற்கும் முன் வைத்துள்ளனர். (2-15)

# மெனிக்பாம் விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞன் உயிரிழப்பு

(மல்லாவி)

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் மோட்டார் கார் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேரெதிராக மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தில் 5பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

செட்டிகுளம் கல்லாற்றுப் பாலத்திற்கு அண்மையாக நேரெதிராக மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் உட்பட மோட்டார் காரில் பயணித்த மூன்று பேருமாக மொத்தம் ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த கல்லாறு வேப்பங்குளம் செட்டிகுளம் முகவரியைச் சேர்ந்த செல்வராசா- நாகராசா (வயது 33) என்ற இளைஞர் சிகிச்சை பலனின்றி கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, விபத்தின் போது படுகாயமடைந்த கே. சண்முகநாதன் மெனிக்பாம் செட்டிகுளம் மற்றும் நீர் கொழும்பைச் சேர்ந்தவர்களான நந்தனசிறி - டெர்னாந்து (வயது 70) மற்றும் ரமனி பெர்னாண்டோ (வயது52), மெல்லால் - பெர்னாண்டோ (வயது 59) ஆகிய நால்வரும் தொடர்ந்தும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (2-15)



கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையும் கண்டாவளைப் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த கண்டாவளை பிரதேச கலாசார விழாவும் வருடாந்தம் வெளியிடப்படும் வளையோசை நாதம் -07 வெளியீட்டு விழாவும் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி ஆற்றியவர்களுக்கான வளையோசை விருது வழங்கும் நிகழ்வும் கடந்த 9 ஆம் திகதி கண்ணகி நகர் கண்ணகி அம்மன் ஆலயத்தின் அமரர் ரதி இராசநாயகம் ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் கலாசாரப் பேரவையின் தலைவரும் கண்டாவளை பிரதேச செயலருமான கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வளையோசை நாதம் -07 இன் முதற்பிரதியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வெளியிட்டு வைத்தார்.

(படங்கள்: கண்டாவளை செய்தியாளர்)

# வடக்கு-கிழக்கில் 15 உள்ளூர் சபைகளில் பெண்களுக்கு 25வீத இடம் இல்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு- கிழக்கிலுள்ள 15 உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 10ஆம் திகதி நடந்த தேர்தலின் மூலம், 340 உள்ளூராட்சி சபைகளுக்கு 8690 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வட்டார அடிப்படையில், 535 பெண்கள் வெற்றிபெற்றுள்ளனர். எனவே, உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீத இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்த, மேலும் 1991 பெண்கள், மேலதிக பட்டியல்களின் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.

எனினும், வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள 15 உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீத இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதிகளவு அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டதே இதற்குக் காரணம்.

மேலும், உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களின் விபரங்களை உள்ளடக்கிய அரசிதழை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, அரசாங்கம் அச்சக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அரசிதழ் வெளிவர இரண்டொரு நாட்கள் தாமதமாகலாம் என்றும் அச்சக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## பேருந்திலிருந்து கீழே விழுந்தவர் பலி

(கொழும்பு)

சிலாபம் - இனிகொடவெல பகுதியில், பேருந்தில் பயணம் செய்த பயணி ஒருவர் கீழே விழுந்து பலியாகியுள்ளார்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில், பேருந்தில் பயணம் செய்த குறித்த நபர், கதவருகே நின்றுகொண்டிருந்ததையடுத்து, கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் 54 வயதான, உஸ்வெட்டகெயியாவ பகுதியை சேர்ந்தவர் எனவும், குறித்த பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இலங்கையில் சிறுவர் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

உலகில் சிறுவர் திருமணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இலங்கையில் சிறுவர் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் வாழும் ஒருசில சமூகத்தினரிடையே இந்த சிறுவர் திருமணங்கள் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இருப்பினும் ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் சிறுவர் திருமணங்கள் எண்ணிக்கை குறைந்தளவாகவே காணப்படுகின்றது.

மேலும், சிறுவர் திருமணங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்படுமெனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## காடுகளின் அளவை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

வன பாதுகாப்பு திணைக்களம் இந்த வருடம் 225 ஹெக்டெயர் நிலப்பரப்பில் காடுகளை வளர்க்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு தேவையான சுமார் நான்கு இலட்சம் மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

இது தவிர ஆறாயிரம் வீட்டுத்தோட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

600 ஹெக்டெயர் நிலப்பரப்பில் மீண்டும் காடு வளர்க்கப்படும்.

நாட்டின் காடுகளின் அளவை 32 சதவீதம் அதிகரிப்பது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கண்டியில் 211 பேர் இதுவரை கைது

# அரசியல் தொடர்பா? வெளிநாட்டு நிதியா?

# வன்முறை தொடர்பில் தீவிர விசாரணை

(கொழும்பு)

கண்டி வன்முறை தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர்களிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டி வன்முறை தொடர்பில் அவசரகால நிலைமை ஒழுங்கு விதிகளில் பிரதான சந்தேகநபர்கள் உட்பட மொத்தமாக 211 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹாசேன் பலகாய என்ற அமித் வீரசிங்க உட்பட 10 பேர் பிரதான சந்தேகநபர்களாக இந்த வன்முறை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்த நிலையில், அவர்கள் அரசியல் ரீதியான தொடர்புகளைக் கொண்டுள்ளனரா? வெளிநாட்டு நிதியைப் பெறுகின்றனரா? வேறு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டுள்ளனரா? ஆயுதங்களை வைத்துள்ளார்களா? என்ற அடிப்படையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகால நிலைமை ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விசாரணை நோக்கத்தின் அடிப்படையில் 14 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சிறுவர் பராமரிப்பு இல்லத்திலிருந்து 4சிறுவர்கள் இரண்டு கடைகளை உடைத்து பாரிய திருட்டு





(ஏறாவூர்)

ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவில் உள்ள சந்திவெளிப் பிரதேசத்தில் இரண்டு கடைகளை உடைத்து பணம், பொருட்கள் திருட்டில் ஈடுபட்டது சம்பந்தமாக 4 சிறுவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட ஒரு தொகைப் பணம் மற்றும் சுமார் 35க்கு மேற்பட்ட தொலைபேசிகள், டப்கள், கமெரா, தொலைபேசி பற்றரி சார்ஜர்கள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என்பனவற்றுடன் கைது செய்யப்பட்ட 4 சிறுவர்களும் 10 தொடக்கம் 14 வயதிற்கிடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸின் நெறிப்படுத்தலில், குற்றத் தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி நிரோஸன் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் ஏறாவூர் பொலிஸ் குற்றத் தடுப்பு புலனாய்வு அதிகாரி சார்ஜன்ற் ஈசாலெப்பை பதூர்தீன் தலைமையிலான பொலிஸ் அணியினர் விசாரணைகளைத் துரிதப்படுத்தினர்.

சந்திவெளி பிரதேசத்திலுள்ள தொலைபேசி விற்பனை நிலையம் மற்றும் உணவு விடுதி என்பன நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கூரை அகற்றி காணொலிக் கமரா உடைக்கப்பட்டு கடைகளிலிருந்த பொருட்களும் பணமும் திருடப்பட்டுள்ளது சம்பந்தமாக பொலிஸார் காணொலிக் கமராவில் பதிவான படங்களை வைத்து விசாரணைகளில் ஈடுபட்டு வந்தனர்.

அவ்வேளையில் கடைகளின் கூரையைக் கழற்றி திருட்டில் ஈடுபட்டவர்கள் பற்றி காணொலிக் கமராவில் பதிவான படங்களை வைத்து விசாரித்தபொழுது அந்தப் படங்களில் தெரிந்த சிறுவர்கள் சந்திவெளியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருப்பவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சிறுவர்கள் விசாரிக்கப்பட்டபொழுது திருடியவற்றில் அவர்கள் தமது உறவினர் நண்பர்களுக்குக் கொடுத்தது போக சுமார் 4800 ரூபாய் மீதிப் பணம் உட்பட தொலைபேசிகள், டப்கள், ஒரு தொகை மீள் நிரப்பு அட்டைகள், கமரா, சார்ஜர்கள் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

பராமரிப்பு நிலையத்திலும் வேறு இடங்களிலுமாக வைக்கப்பட்டுள்ள திருடப்பட்ட மேலும் சில தொலைபேசிகளையும் பணத்தையும் கைப்பற்றும் விசாரணைகளில் பொலிஸார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

தனது தொலைபேசி விற்பனை நிலையத்தை வெள்ளி மற்றும் சனிக்கிழமை ஆகிய இரண்டு இரவுகளிலும் மேற்படி சிறுவர்கள் சாதுரியமாக கூரை பிரித்து உட்புகுந்து திருட்டில் ஈடுபட்டதாக அதன் உரிமையாளர் நவரெட்ணம் விஜந்தன் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சிறுவர்கள் நால்வரும் வாழைச்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு ஆகிய சிறுவர் பராமரிப்பு இல்லம் அமைந்துள்ள அயல் இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி சிறுவர் இல்லத்தில் சுமார் 20 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளை கண்டித்து பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்




(லண்டன்)

அம்பாறை மற்றும் மத்திய மாகாணத்தில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களையும் அரசின் அசமந்தப் போக்கினையும் கண்டித்து நேற்று முன்தினம் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாடெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

ஐக்கிய இராச்சிய பிரதமர் இல்லம் முன்பாக ஆரம்பித்த இந்தப் பேரணி லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் வரை சுமார் 9 கிலோ மீற்றர் வரை சென்றது. இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பெண்களும் குழந்தைகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

தூதரகத்தை அடைந்த பேரணி ஹைட் பார்க் கார்டன்ஸ் வீதியை முற்றுகையிட்டதோடு இலங்கைத் தூதரகம் அதிரும் அளவுக்கு பேரணியில் ஈடுபட்டவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

எனினும் நாகரிகமாகவும் ஒழுக்கக் கோப்புடனும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளதோடு நீதி நிலை நாட்டப்படுவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைக்க நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தமுறை கல்வியியற் கல்லூரிகளுக்கு 4 ஆயிரத்து 745 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வியமைச்சின் ஆசிரியர் கல்விக்கு பொறுப்பான பிரதான ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக 32 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சை தேசிய கல்வியியற் கல்லூரி மட்டத்தில் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளுக்கு 27 பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இணையத்தில் இனவாதம் பரப்பிய மேலும் இரு மாணவர்கள் கைது

(கொழும்பு)

இணையத்தளத்தை பயன்படுத்தி இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் ஹோமாகமை மற்றும் மினுவாங்கொடை பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாணவர்கள் இருவரும் நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கிறிபத்கொடை மாகொல இளைஞர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இனவாத ரீதியான கருத்துக்களை பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்தமைக்காக இதற்கு முன்னரும் இதே போன்று இருவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வன்செயல்களை கண்டித்து யாழில் நாளை கவனயீர்ப்பு

### சமூக நீதிக்கான அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)


கண்டியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத வன்செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில். கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற இன அடக்குமுறை யுத்தத்தின் காரணமாகப் பல்வேறு இன்னல்களை எதிர் கொண்ட எம்மை, மீண்டுமொரு இனவாத யுத்தத்திற்குள் தள்ளும் முயற்சியாக, அண்மையில் அம்பாறை மாவட்டத்தைத் தொடர்ந்து கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்து விடப்பட்டுள்ள இனவாத வன்செயல்கள் அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் எம் மீது திணிக்கப்பட்ட தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டுத் தீயினை, திட்டமிட்ட இனக் கலவரங்களினூடாக கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக்கி, பின்னர் கொடிய யுத்தம் ஒன்றிற்குள் எமது தேசத்தைக் கொண்டுபோய்த் தள்ளி, பெரும் அழிவுகள் ஏற்படக் காரணமான சக்திகள், மீண்டும் அதே வகையில், அக் கொடிய யுத்தத்தினால் பாதிப்பை எதிர்கொண்ட இலங்கையின் இன்னொரு தேசிய இனமான முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டி விடுவதன் மூலம், முஸ்லிம் - சிங்கள இனமுரண்பாட்டு யுத்தமொன்றை ஏற்படுத்தி, தமது குறுகிய அரசியல், பொருளாதார நலன்களுக்காக எம் வாழ்வை அழிக்க முனைகின்றன.

எனவே இந்த உண்மையை உணர்ந்துகொண்டு, எமதும், எமது எதிர்கால சந்ததியினதும் இருப்பைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, எம் மத்தியில் இன, மத, மொழி அடிப்படையிலான பேதங்களைப் பெரிதாக்கி, எமது வாழ்வை அழிக்க முயலும் சக்திகளுக்கு எதிராக, நாம் அனைவரும் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் அணிதிரளுமாறு அழைக்கின்றோம் எனக் கோரப்பட்டுள்ளது. (இ-9)

## சிறுத்தை குட்டிகள் மீட்பு



(கொழும்பு)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை கிறேக்லி தோட்டத்தில் உயிருடன் சிறுத்தைக் குட்டிகள் இரண்டு நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு சிறுத்தைக் குட்டிகள் தோட்டத்தில் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியில் மரத்திற்கு கீழ் இருப்பதை அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கண்டுள்ளனர். இதனையடுத்து, சிறுவர்கள் பொதுமக்களிடம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் உடனடியாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும், திம்புள்ள பத்தனை பொலிஸாருக்கும் இது குறித்த தகவலை வழங்கியுள்ளனர்.

அண்மைக்காலமாக மக்கள் நடமாடும் பகுதிகளில் சிறுத்தைகள் நடமாடி வருவதாக தெரிவித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் சிறுத்தைக் குட்டிகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரமித் ரம்புக்வெல்ல வெளியில் வந்தார்


(கொழும்பு)

நாவல- நாரஹென்பிட்டி லேக் விக் ட்ரைவ் வீதியில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை விபத்துக்குள்ளாகிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த ரமித் ரம்புக்வெல்ல பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் 10,000 ரூபா பொலிஸ் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை செலுத்தியமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் நாரஹென்பிட்டி பொலிஸாரால் ரமித் ரம்புக்வெல்ல நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் நாளை 13 ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் ரமித் ரம்புக்வெலவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ரமித் ரம்புக்வெல பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு தனது கைத்துப்பாக்கியால் தலையில் தாக்கியதால் அவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# பாரதம்

## "பிரதமராகும் ஆசை இல்லை" நிதின் கட்காரி



(மும்பை)

பிரதமர் ஆவது குறித்து நான் ஒருபோதும் கனவு காணவும் இல்லை, அதற்காக ஆசைப்படவும் இல்லை என மத்திய வீதி போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

'இந்தியா டுடே' சார்பில் மும்பையில் நேற்று முன்தினம் நடந்த கலந்தாய்வு கூட்டத்தில் மத்திய வீதி போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிதின் கட்காரி கலந்து கொண்டார். அப்போது அவரிடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன.

குறிப்பாக, தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்து வரும் சிவசேனா, தெலுங்குதேசம், அகாலி தளம் கட்சிகள் மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் நிலையில், அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அதிக பெரும்பான்மை பெற முடியாமல் போனால், பிரதமர் வேட்பாளராக நீங்கள் (நிதின் கட்காரி) ஒருமனதாக தேர்வாக முடியுமா? என்று கேட்கப்பட்டது.

இதற்கு அவர் பதிலளிக்கையில், 'நான் மனநிறைவோடு இருக்கிறேன். பிரதமர் ஆவது குறித்து நான் ஒருபோதும் கனவு காணவும் இல்லை, அதற்காக ஆசைப்படவும் இல்லை. 2019-ம் ஆண்டு தேர்தலில் மோடி தலைமையில் பா.ஜனதா சிறப்பாக வெற்றி பெறும்.

அடுத்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையும் என நம்பிக்கை வெளியிட்டார்.

எனினும் அரசியலில் எதுவும் நிரந்தரம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (10)

## அ.தி.மு.கவின் சொத்து மதிப்பு 224.87 கோடியாக உயர்வு

(சென்னை)

கடந்த ஐந்து ஆண்டுகளில் அ.தி.மு.க. மற்றும் சமாஜ்வாரி போன்ற கட்சிகளின் சொத்துமதிப்பு கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

ஜனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் படி கடந்த 5 ஆண்டுகளில் இரு கட்சிகளினதும் சொத்து மதிப்பு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011-2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88.21 கோடியாக இருந்த அ.தி.மு.க. சொத்து, 2015-2016 இல் 224.87 கோடியாக அதிகரித்துள்ளது.



அதேபோன்று 2011-2012இல் 212.86 கோடியாக இருந்த சமாஜ்வாரியின் சொத்துமதிப்பு, 2015-2016 இல் 634.96 கோடியாக உயர்வடைந்துள்ளது.

மேலும் கட்சிகள் பெரும்பாலும் பாதுகாப்பான முதலீடாக வைப்பு நிதியையே கருதுகின்றன என்பதும் புள்ளிவிபரங்களின்படி தெரியவந்துள்ளது.

2011 -2012 இல் 331.54 கோடியாக இருந்த, மாநில கட்சிகளின் வைப்பு நிதி முதலீட்டின் மதிப்பு 2015-2016 இல் 154.80 கோடியாக அதிகரித்துள்ளது.

கட்சிகளின்மொத்த சொத்து மதிப்பில், 80.19 விழுக்காடு ஆகும்.

இதேவேளை மாநில கட்சிகளில் தி.மு.கவின் சொத்து மதிப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் 253 வீதம் உயர்வடைந்துள் ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(10)

## ஊதிய ...
## வியப்பில் ...



(ரொரன்டோ)

கியூபெக் நகரத்...
மருத்துவர்களுக்கு ...
எதிர்த்து அரசு மருத்து...
சபையிடம் மனுவொ...
துள்ளனர்.

750க்கும் மேற்பட்...
இணைந்து கையொ...
மனுவை கையளித்து...

தேவைகளுக்கு ஏற்...
வருமானம் பெறுவதா...
தேவையில்லை என...
மனைகளில் பணியு...
யர்கள் மற்றும் அலுவ...
எனப் பலரும் கடுமை...
வருகின்றனர்.

மேலும், செவிலிய...
குறை மிக அதிகமா...

## பிரித்தானியா- சவுதிக்கிடையேயான போர் விமான ஒப்பந்தம் கைச்சாத்து

(லண்டன்)

சவுதி அரேபியாவுக்கு 48 டைஃபூன் (Typhoon) போர் விமானங்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் நிலையில் இருப்பதாக, பிரித்தானிய விமான உற்பத்தி நிறுவனமான பி.ஏ.ஈ. சிஸ்டம்ஸ் (BAE Systems) தெரிவித்துள்ளது.




பிரித்தானியப் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கெவின் வில்லியம்ஸனுக்கும், சவுதி இளவரசர் முஹம்மட் பின் சல் மானுக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்தானது.

65 பில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான வணிகம் மற்றும் முதலீட்டு இலக்கு, சவுதி இளவரசர் சல்மானின் பிரித்தானியப் பயணத்தின் போது, ஒப்புக்கொள்ளப்பட்டதாக, பிரித்தானிய அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளனர். (10)

## அதிகாரத்தைக் கைப்பற்ற... அரசியல் சாசனத்தில் மாற்...
## ரஷ்ய ஜனாதிபதி திட்...

(மொஸ்கோ)

அமெரிக்க தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அரசியல் சாசனத்தை மாற்றமாட்டேன் என திட்டவட்டமாக தெரிவித்தார்.



கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நடைபெறும் சீனா வில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒருமுறை இந்த பதவியை வகித்தவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக தேர்தலில் போட்டியிடலாம்.

ஆனால், பத்தாண்டுகள் வரை ஆட்சி செய்து இரண்டாவது பதவிக் காலத்தை நிறைவு செய்தவர்கள் அடுத்து மூன்றாவது முறையாக தேர்தல்களில் போட்டியிடக் கூடாது என அந்நாட்டின் அரசியலமைப்பு சட்டம் தெளிவுபடுத்துகிறது.

சீனாவின் ஜனாதிபதியாக தற்போது பதவி வகித்துவரும் ஜி ஜின்பிங் கடந்த 2013ஆம் ஆண்டு சீனாவின் ஆளும் கட்சித் தலைவராகவும், அந்நாட்டின் ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தலைவராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

இந்நிலையில், சீனாவின் ஜனாதிபதி இருமுறைக்கு மேல் பதவியில் நீடிக்கக் கூடாது என்னும் அரசியலமைப்பு சட்டத்தில் சமீபத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி ஒருவர் எத்தனைமுறை வேண்டுமானாலும் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படலாம்.

## தேசத்துரோக குற்றச்சாட்டில் முஷாரப்பை கைது செய்ய உத்தரவு

(இஸ்லாமாபாத்)

கடந்த 2007இல் பாகிஸ்தானில் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் அவசரநிலை பிரகடனம் செய்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பலர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

100-க்கும் மேற்பட்ட நீதிபதிகள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். அவசரநிலை பிரகடனம் செய்ததற்காக முஷா ரப் மீது கடும் தேசத்து ரோக வழக்குப் பதிவு செய்யப்பட் டது.

இந்த வழக்கு பெஷாவர் உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி யாஹ்யா அப்ரிதி தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு முன் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது முஷாரப்புக்கு சொந்தமான சொத்து விபரங்களை உள்துறை அமைச்சகம் அளித்தது.

அரசு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று முஷாரப்பை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் அவரது சொத்துகளை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்போது டுபாயில் உள்ள முஷாரப்பை கைது செய்ய ஐக்கிய அரபு அமீரக (யுஏஇ) அரசுடன் பரஸ்பரம் சட்ட உதவி ஒப்பந்தம் செய்துகொள்ளவும் அரசுக்கு பெஷாவர் உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. (10)

## அணுசக்தி உட்பட 14 ஒப்பந்தங்கள் இந்தியாவுடன் பிரான்ஸ் கைச்சாத்து

(டில்லி)

இந்தியா சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரன், அவரது மனைவி பிரிகைட் மேக்ரன் ஆகியோர் நேற்று முன்தினம் டில்லி யிலுள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அணுசக்தி, பாதுகாப்பு, தீவிரவாத ஒழிப்பு, கல்வி உட்பட 14 துறைகளில் இந்தியாவும் பிரான்ஸும் ஒப்பந்தம் மேற்கொண்டன. பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் - பிரதமர் மோடி முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் கடந்த வெள்ளிக்கிழமை டில்லிவந்தார்.

பின்னர் இரு நாட்டு தலைவர்கள் முன்னிலையில், 14 துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அணுசக்தி, பாதுகாப்பு, இரகசிய தகவல்கள் பாது காப்பு, தீவிரவாத ஒழிப்பு, கல்வி, சுற்றுச்சூழல், நகர்ப்புற மேம்பாடு, ரயில்வே உட்பட 14 துறைகளில் இரு நாடுகளும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. பின்னர் பிரதமர் மோடி, ஜனாதிபதி மெக்ரான் இருவரும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, "இரு நாடுகளுக்கு இடையில் இராணுவம், பாதுகாப்பு விடயத்தில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும்" என்று இருவரும் தெரிவித்தனர். மெக்ரான் கருத்துத் தெரிவிக்கும் போது, "தீவிரவாத, மதவாத அச்சுறுத்தல்களை ஒடுக்க இந்தியா - பிரான்ஸ் நாடுகள் முழு முனைப்புடன் செயலாற்றும். அதற்காக இராணுவ துறையில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு புதிய கட்டத்தை எட்டியுள்ளது" என்றார்.

இந்தச் சந்திப்பின் போது மோடியும் மெக்ரானும் இந்திய பசுபிக் பிராந்திய விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## காந்தியின் அரிய புகைப்...



(வோஷிங்டன்)

இந்திய சுதந்திர போராட்டத்தின் போது லண்டனில் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் எடுக்கப்பட்ட காந்தியின் அரிய புகைப்படம் ரூ.28 இலட்சத்துக்கு ஏலம் போனது. இந்திய சுதந்திர போராட்டத்தின் போது இங்கிலாந்து அரசுட...
வார்த்...
வட்ட ...
1930 ...

# வெளிநாடு



## ...திய உயர்வு தேவையில்லை ...ப்பில் ஆழ்த்திய மருத்துவர்கள்



...ன்டோ)
...பெக் நகரத்தைச் சேர்ந்த அரசு ...வர்களுக்கு, ஊதிய உயர்வை ... அரசு மருத்துவர்கள், மருத்துவ ...ம் மனுவொன்றை கையளித் ...ர்.

...கும் மேற்பட்ட மருத்துவர்கள் ...ந்து கையொப்பமிட்டு குறித்த ... கையளித்துள்ளனர்.

...வைகளுக்கு ஏற்ப அதிகப்படியான ...ம் பெறுவதால், ஊதிய உயர்வு ...யில்லை எனவும், மருத்துவ ...ளில் பணியாற்றும் செவிலி ...மற்றும் அலுவலக ஊழியர்கள் ...லரும் கடுமையாக உழைத்து ...றனர்.

...ம், செவிலியர்களின் பற்றாக் ...மிக அதிகமாக உள்ளது. அத னால் அவர்கள் பணிச்சுமையால் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.


எங்களது சக ஊழியர்கள் இப்படிப் பட்ட சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கும் போது, நாங்கள் எவ்வாறு இந்த ஊதிய உயர்வை ஏற்றுக்கொள்ள முடியும்? அதனால் எங்களுக்கு இந்த ஊதிய உயர்வு தேவையில்லை.

ஊதிய உயர்வுப் பணத்தை நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத் திக்கொள்ளுங்கள் என குறிப்பிடப்பட் டுள்ளது.

ஊதிய உயர்வைக் கோரிய உலக நாடுகளில் போராட்டம் நடக்கும் அதே வேளை கனடாவில் ஊதிய உயர்வு வேண்டாம் என மருத்துவர்கள் போராட் டம் நடத்தியது உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (10)

## ஆப்கானுடன் தலிபான்கள் சமரசமாகும் வரை அமெரிக்காவுடனான பேச்சிற்கு இடமில்லை

### வெளியுறவுத்துறை அதிகாரி ஆலிஸ் வெல்ஸ்



(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் அரசு டன் தலிபான்கள் சமரச பேச்சு நடத்தாதவரையில், அமெரிக்கா அவர்களுடன் பேசாது என வெளியுறவுத் துறை உயர் அதிகாரி ஆலிஸ் வெல்ஸ் தெளிவுபடுத்தியுள் ளார்.

ஆப்கானிஸ்தானில் தலி பான்கள் ஆதிக்கம் முடிவுக்கு வரவில்லை. அவ்வப்போது அந்த நாட்டின் இராணுவ வீரர்கள் மீதும், அமெரிக்க கூட்டுப்படையினர் மீதும் கொடூரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தலை நகர் காபூலில் நடந்த அமைதி மாநாட்டில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி, தலி பான்களுடன் நிபந்தனை யற்ற பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்தார்.

ஆனால் தலிபான்களை பொறுத்தவரையில், அமெ ரிக்காவுடன் நேரடி பேச்சு வார்த்தை நடத்தத்தான் விரும்புகின்றனர்.

இது தொடர்பாக அவர கள் விருப்பம் வெளியிட்டு உள்ளனர்.

இந்த நிலையில், வோஷிங் டனில் அமெரிக்க அமைதி இன்ஸ்டியூட்டில் நடந்த நிகழ்ச்சியல் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங் களை கவனிக்கிற வெளி யுறவுத்துறை உயர் அதிகாரி ஆலிஸ் வெல்ஸ் இதுபற்றி கருத்து தெரிவித்தார்.

வட கொரியா, தென் கொரியா விவகாரங்களை யும், ஆப்கானிஸ்தான் நிலை மையையும் ஒப்பிட முடி யாது.

அமெரிக்க ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு ஒப்பு தல் அளிக்கும் முன்னரே, வட கொரியா மற்றும் தென் கொரியா தலைவர்கள் சந்தித் துப் பேசியுள்ளனர். ஆப் கானிஸ்தான் நிலைமை அது அல்ல.

ஆப்கானிஸ்தானை பொறு த்தவரையில் அங்கு கிளர் ச்சி நடக்கிறது. கிளர்ச்சியா ளர்களும் (தலிபான்களும்), அரசாங்கமும் முதலில் நேர டியாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

அவர்கள் விவகாரத்தில் தீர்வு காண விரும்புவோ ருடனும் பேச வேண்டும்.

இதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம் என தெரிவித்தார்.

இதன் மூலம், ஆப்கா னிஸ்தான் அரசுடன் தலி பான்கள் பேச்சு நடத்தாதவரை யில், அமெரிக்கா அவர்களு டன் பேசாது என்பதை ஆலிஸ் வெல்ஸ் தெளிவுபடுத்தியுள் ளார். (10)

## ...பற்றும் வரை ...மாற்றமில்லை ...திட்டவட்டம்

இந்நிலையில், சீனாவின் அண்டை நாடான ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஏற்கனவே மூன்று முறை அந்நாட்டின் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் நான்காவது முறையாக போட்டியிட உள்ளார்.


இந்த தேர்தலிலும் அவரே வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது. சீனாவை போல் ரஷ்யாவிலும் ஒருவர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதி யாக தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

இதையடுத்து பிரபல அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று புடினிடம் பேட்டி எடுத்தது. அப்போது, சீனாவை போன்று ரஷ்யாவிலும் அரசியல் சாசன சட்டம் மாற்றியமைக்க படுமா? என்ற கேள்விக்கு புடின் பதிலளித்தார்.

அவர் அளித்த பதிலில், அதிகா ரத்தை கைப்பற்றுவதற்காக அரசியல் சாசனத்தை மாற்றமாட்டேன். இது வரை அப்படிப்பட்ட திட்டம் எனக்கு இல்லை எனவும் அவர் தெரிவித் துள்ளார். (10)

## கட்டுப்பாட்டையிழந்த டியாங்கோ விண்வெளி நிலையம் ஏப்ரல் மாதத்திற்குள் பூமியை நோக்கி விழும் அபாயம்

### சீன விஞ்ஞானிகள் எச்சரிக்கை



(பீஜிங்)

சீனாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான டியாங்கோங் - 1 தனது கட் டுப்பாட்டை இழந்ததனால் பூமியை நோக்கி விழப் போவதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

சீனா டியாங்கோங் -1 விண்வெளி நிலையத்தை விண்வெளியில் 2016 ஆம் ஆண்டு அனுப்பியது. ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு பிறகு விண்வெளியில் பெரிய அளவில் நிறுவப்பட்ட சீனா வின் முதல் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இது.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்னர், டியாங்கோங்-1 தனது வட் டப்பாதையில் கட்டுப்பாட்டை இழந்ததாகவும், இதனால் அதனை தொடர்புகொள்ள முடியவில்லை என சீன விஞ்ஞானிகள் தெரிவித்த னர்.

இதற்கான காரணம் தெரியாமல் சீன விஞ்ஞானி கள் தவித்து வந்த நிலையில் டியாங்கோங் -1 விண்வெளி ஆராய்ச்சி நிலையம் பூமியை நோக்கி விழப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுமார் 9.5 டன் எடை கொண்ட இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மார்ச் 27 முதல் ஏப்ரல் 8 ஆகிய வற்றுக்கு இடைப்பட்ட நாட் களில் பூமியில் விழலாம் என்றும் வட மற்றும் தென் அமெரிக்கா, சீனா, மத்திய கிழக்கு நாடுகள், ஆபி ரிக்கா, அவுஸ்திரேலியா, பசுபிக் மற்றும் அட்லாண்டிக் கடல் ஆகிய இடங்களில் விழுவதற்கு வாய்ப்பிருக் கலாம் என சீன விஞ்ஞா னிகள் எச்சரிக்கை விடுத்து ள்ளனர். (10)

## ஆப்கானில் தலிபான்கள் ஆவேசத்தாக்குதல் 45 பேர் உடல் சிதறிப் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தான் பரா மாகாணத்தின் மேற்கு பகு தியில் நேற்று முன்தினம் தலிபான் தீவிரவாதிகளுக் கும் பாதுகாப்பு படையினருக் கும் இடையிலான மோதலில் 45 பேர் பலியாகியுள்ள னர்.

ஆப்கானிஸ்தான் பரா மாகாணத்தின் மேற்கு பகுதி யில் பலாபலுக் மாவட்டத்தில் சமீபகாலமாக இங்குள்ள இராணுவ நிலைகளை குறி வைத்து தலிபான் தீவிரவா திகள் நேற்று முன்தினம் நடத்திய ஆவேசத் தாக்குத லில் இராணுவ கமாண்டோ படையை சேர்ந்த 7 வீரர்க ளும் 8 பொலிஸாரும் பரிதா பமாக உயிரிழந்தனர்.

பாதுகாப்பு படையினர் நடத்திய எதிர் தாக்குதலில் தலிபான் தீவிரவாதிகள் 30 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட னர்.

தலிபான்களின் தொடர் தாக்குதலுக்கு சர்வதேச நாடு கள் கடும் கண்டனம் வெளி யிட்டுள்ளன. (10)

## ...கைப்படம் 28 இலட்சத்துக்கு ஏலம்



...அரசுடன் வட்டமேசை மாநாடு மூலம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. 2ஆவது வட்ட மேசை மாநாடு லண்டனில் 1930 முதல் 1932ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் காந்தி மற்றும் மதன் மோகன் மாலவியா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண டனர். அவர்களுடன் காந்தி இணைந்து இருக்கும் புகை ப்படம் எடுக்கப்பட்டது.

இந்தப் புகைப்படத்தில் பவுன்டன் பேனாவினால் இடது கையால் எம்.கே. காந்தி என அவர் கையெழுத் திட்டுள்ளார். இத்தகைய அரிய போட்டோ அமெரிக்கா வின் பாஸ்டன் நகரில் உள்ள ஆர்.ஆர். மையத்தில் ஏலம் விடப்பட்டது. குறித்த புகைப் படம் 28 இலட்சத்துக்கு (41, 806 டொலர்) ஏலம் போனது. புகைப்படத்தை ஏலத்தில் எடுத்தவர் யார் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. (10)

# சாலாவ வெடிப்புச் சம்பவத்தில் 12 பில்லியன் ரூபா வரை நட்டம்



(கொழும்பு)

அவிஸாவளை- கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 12 பில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சாலாவ வெடிப்பு சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை குழு மேற்கொண்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த சம்பவத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய 14 அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.


. அத்துடன், வெடிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களை மீண்டும் அமைக்கும் பணிகளுக்காக, இராணுவத்திடம் இருந்த 5 ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி மாலை சாலாவ இராணுவ முகாமின் ஆயுத களஞ்சிய சாலையில் வெடிப்பு ஏற்பட்டது.

அதில் ஒருவர் பலியானதுடன் 47 பேர் காயமடைந்தனர். அப்பிரதேசத்தின் 300 வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பசிலைச் சந்தித்த ஐ.நா.உயர் அதிகாரி

## ராஜபக்ஷக்கள் மீது திரும்பும் அனைத்துலக கவனம்



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் உயர் அதிகாரி , ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அரசியல் விவகாரங்களுக்கான உதவித் தூதுவர் ஜெப்ரி பெல்ட்மனுடன் கொழும்பு வந்துள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான திணைக்களத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான தலைவர் மேரியமாசிட்டா பசில் ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார்.

இதன்போது தற்போதைய அரசியல் போக்குகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பசில் ராஜபக்ஷ, உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் தொடர்புகளைப்பேண அனைத்துலக சமூகம், ஆர்வம் காட்டுகிறது என்பதையே இந்தச் சந்திப்பு வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய ஒற்றுமை அரசாங்கம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இப்போது தேசிய ஒற்றுமை அரசாங்கம் என ஒன்று இல்லை என்று அவரிடம் கூறினேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.கட்சி எதிர்பார்த்தது சரத் பொன்சேகாவையே

## அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சை லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு வழங்கத் தான் எதிர்ப்புத் தெரிவித்ததாக கூறப்படும் கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தது, இவ்வமைச்சுப் பதவி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இருப்பினும், அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தும் அந்தப் பதவி அவருக்கு கிடைக்காமல் போனது.

இருந்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் மிகவும் அனுபவமுள்ள சிறந்த தலைவர் ஒருவருக்கு அந்தப் பதவி கிடைக்கப் பெற்றமையையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# மக்கள் பொறுமையுடன் செயற்படவேண்டும்

(கொழும்பு)

இலங்கை போன்ற கல்வித் துறையில் முன்னணியிலுள்ள ஒரு நாட்டில் வாழும் நாம் அமைதியின்மையான ஒரு சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும் என இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நாட்டு மக்கள் பொறுமையுடனும் தூர நோக்குடனும் நடந்துகொள்ள வேண்டும் என அவ்வொன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி ரவி ஜயவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பெரும்பாலான மக்கள் இன்று இலத்திரனியல் ஊடகங்களை சுற்றியுள்ளனர். மக்களிடம் சந்தேகத்தை ஏற்படுத்தும் விடயங்களை சரியாக இனங்கண்டு, இதன் பிறகு இதுபோன்ற ஒரு சம்பவம் இடம்பெறாத வண்ணம் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் அறிவுரை வழங்கினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பணத்தின் அருமை தெரியாதவர்கள்!

அணைக்கட்டுக்கு நீர் பல வழிகளில் வருகிறது. ஒரு வழியால் வெளியேறுகிறது. ஆனால் நிதிக்கட்டு அப்படியில்லை. அதற்கு ஒரு வழியாய் மட்டுமே வரவு வருகிறது. பல வழிகளில் செலவாகியது. சம்பாதிப்பதுதான் எவ்வளவு கடினமாகிவிட்டது. (முறையான சம்பாத்தியம் செய்பவர்களைப் பற்றித்தான் இங்கு பேச்சு).

எங்கள் மகன் ஏகமாய்ச் செலவுக்குப் பணம் கேட்கிறான். குடும்பப் பொறுப்பே அவனுக்கு வரவில்லை என்றது ஒரு தம்பதி. சம்பளப் பணத்தை அவனிடம் அப்படியே கொடுத்துக் குடும்ப நிர்வாகத்தை நீ ஒரு மாதம் பார்த்துக் கொள் என்று கூடவே இருந்து மேற்பார்வை செய்யுங்கள் என்றேன். கரண்ட் பில் எப்படிம்மா கட்டறது? நான் வேணும்னா பொக்கெட் மணிய இந்த மாசம் குறைச்சுக்குறேன் என்றானாம் அவன், சக்ஸஸ்!

செலவினங்களை உணராமல் இப்படி ஆட்டம் போடுகிற குடும்ப உறுப்பினர்களிடம் செலவுக் கணக்கை நீட்டியேனும் சரி செய்யத்தான் வேண்டும்.

கடனுக்குக் கிடைக்கிறது; தவணையில் வருகிறது என்று அவசியமற்ற பொருள்களை வாங்கி வைத்துக்கொண்டு திணறுகிற குடும்பங்களைப் பார்க்கச் சிரிப்புத்தான் வருகிறது.

ஒரு பொருளின் மீது ஆசைப்பட்டு வாங்குகிற பலர் பிறகு முழுமையாகப் பயன்படுத்தாமலும், வாங்கிய பிறகு அதன் மீதுள்ள ஆர்வம் குறைந்ததும் அடியோடு விட்டுவிடுகின்றனர்.

ஒரு பொருளைப் பார்த்ததுமே அதை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று எண்ணக் கூடாது. அதைப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும். தொடர்ந்து அந்தப் பொருள் நமக்குத் தேவை தேவை என்று உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தாலே அது இல்லாவிட்டால் சமாளிக்க முடியாது என்கிற நிலைமை உருவானாலே வாங்கலாம். இப்படித் தள்ளிப் போட்டால் மேற்கூறியவாறு நிகழாது பணமும் நம்மிடம் தங்கும்.

இரட்டை மாட்டு வண்டி வைத்திருக்கிற பலரை நான் பார்த்திருக்கிறேன். தினமும் 200-300 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஆனாலும் பிளாட்பார வாழ்க்கைதான்.

என் பக்கத்தில் அமர்ந்து படம் பார்த்துக் கொண்டிருந்த தினக்கூலி மனிதர் ஒருவர் தன் நண்பரிடம் சொல்லிக் கொண்டிருந்த விடயங்கள் இவை. எழுபது ரூபா கூலி இன்னிக்கு. இதோ 25 ரூபாய் டிக்கெட் உனக்கும் எனக்கும் 40 ரூபா பிரியாணி, கறி.5 ரூபா கையில் இருக்கு. வாழ்க்கையை அனுபவிக்கணும்டா. எதுக்கு மனுஷன் கஷ்டப்படறான்? நாளைய பொழுதை நாளைக்குப் பார்த்துக்கலாம். இது உருப்படும் வழியல்ல.

நடந்து போகும் தூரத்தை ஆட்டோவிலும் பஸ்ஸில் போகவேண்டிய இடத்திற்குக் காரிலும் ரயிலில் போக வேண்டியதற்கு விமானத்திலும் போகிறவர்கள் பணத்தின் அருமை தெரியாதவர்களே.

ஒருவருக்கு 1000 வருமானம் வந்த போது 1100 செலவு; 5000 வருமானம் வருகிற போது 6000 செலவு என்றால் கோளாறு நிச்சயமாக அவரிடம்தான். விலைவாசியை அவர் குறை சொல்வதில் பயனில்லை.

செலவு செய்யும் முன் வேறு வழியே இல்லையா? செலவு செய்துதான் ஆக வேண்டுமா? ஆகிய கேள்விகளுக்கு முக்கியத்துவம் தருகிறவர்களுக்கு செலவுக்கு என்ன வழி என்ற கேள்விக்கே இடமில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# பசுமை, ஆரோக்கியமான உலகை உருவாக்குவதற்கு தீர்வுகளை சூரியசக்தி கூட்டமைப்பு கொண்டுவரும்

## ஜனாதிபதி மைத்திரி இந்தியாவில் நம்பிக்கை

(டில்லி)

உலக மக்களுக்கு பசுமை, தூய்மை மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான தீர்வுகளை கொண்டுவருவதற்கு இக்கூட்டமைப்பில் உள்ள நாடுகளின் பலத்தை சர்வதேச சூரியசக்தி மாநாடு எடுத்துக்காட்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டில்லியில் நேற்று ஆரம்பமான சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் முதலாவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டின் தீர்மானங்கள் நடைமுறை சாத்தியமான கூட்டுறவை நோக்கிய இந்த கூட்டமைப்பிலுள்ள நாடுகளின் இணைந்த முயற்சிகளை எடுத்துக்காட்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி ஏனைய உலக நாடுகளும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்துகொள்ளும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

உலக சனத்தொகை வளர்ச்சியுடன் சக்தி வளத்தேவை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி சூரியசக்தியின் மூலம் இப்பிரச்சினையை தீர்க்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

சக்திவள பிரச்சினை இலங்கை மக்களும் உலகிலுள்ள பல்வேறு அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள மக்களும் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையாகும்.

சூரியசக்தி வளத்துறையில் இலங்கையின் முன்னெடுப்புகள் தொடர்பாக விளக்கிய ஜனாதிபதி இலங்கையில் நாம் 'சூரிய பல சங்ராமய' 'சூரியசக்தி வள போராட்டம்' என்ற நிகழ்ச்சித் திட்டமொன்றை ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தினூடாக 2025 ஆம் ஆண்டாகின்றபோது 1000 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்திசெய்ய நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளுக்கு உதவும் வகையில் ஒரு மெகாவோட் முதல் 10 மெகா வோட் இயல்திறன்கொண்ட சூரிய சக்தி முறைமைகளை அபிவிருத்தி செய்யும் செயன்முறையையும் இலங்கை முன்னெடுத்துவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் பாரிய சூரியசக்தி திட்டங்களுக்கு உதவியளித்து வருகின்றமைக்காக சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பிற்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்ததுடன், இது எமது நாட்டில் பல்வேறு பாடசாலைகள், வீடுகள், வைத்தியசாலைகள், அரசாங்க நிறுவனங்களுக்கு பயன்மிக்கதாகும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் முன்னெடுப்புகளை வெற்றிபெறச் செய்வதற்கு தலைமைத்துவத்தை வழங்கிவரும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி,

இம்மாநாட்டில் பெரும் எண்ணிக்கையான அரச தலைவர்களும், அரசாங்க பிரதிநிதிகளும் பங்குபற்றுவதானது இம்மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டமைப்புக்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இலங்கையின் முழுமையான அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி உலகத் தலைவர்களிடம் உறுதிப்படுத்தினார். (இ-7)

## "இனவாதமல்ல; நாசகாரச் செயல்"

# ஆனமடுவ உணவக தீச்சம்பவத்தை இராஜாங்க அமைச்சர் பார்வையிட்டார்



(புத்தளம்)

ஆனமடுவ-புத்தளம் வீதியிலுள்ள முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான உணவகம் நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் தீயிடப்பட்ட சம்பவத்தை இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, ஹோட்டல் உரிமையாளர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இது ஒரு இனவாத செயல் அல்லவெனவும், ஒரு நாசகார நடவடிக்கையே ஆகும் எனவும் இப்பகுதியில் ஏற்கனவே இருந்த சுமுக நிலைமையை மீண்டும் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மதீன ஹோட்டல் முழுமையாக தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது. ஹோட்டலின் அருகில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த போதிலும், தீ வைக்கப்படும் போது அவர்கள் அந்த இடத்தில் இல்லை எனத் தெரியவருகிறது. (இ-7)

## கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது




(கொழும்பு)

தமது பிரச்சினைக்கு தீர்வு வழங்கக்கோரி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று 12ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

வேதன அதிகரிப்பு உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தை அவர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் கோரிக்கைகள் குறித்து இதுவரையில் எந்த அதிகாரியும் கவனம் செலுத்தவில்லை என பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டணியின் தலைவர் ஹெட்வர்ட் மல்வத்தகே தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டம் காரணமாக சகல பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் என்பன பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதைப்பொருளுடன் சிவனொளிபாதமலையில் 24 இளைஞர்கள் கைது

(ஹற்றன்)

போதைப்பொருளுடன் சிவனொளிபாதமலையை தரிசிக்க சென்ற 24 இளைஞர்கள் மோப்பநாயின் உதவியுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் கேரளக் கஞ்சா வைத்திருந்த 22 பேரும், சட்டவிரோத சிகரெட்டுக்கள் வைத்திருந்த 2 பேர் உட்பட மொத்தம் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை, தியகல பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிமுதல் இரவு 8 மணிவரை வாகனங்களை சோதனை செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சிவனொளிபாத மலைக்கு போதைவஸ்துக்களை கொண்டு செல்வதனை தடுப்பதற்காக ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் கோரா என்ற மோப்ப நாயின் உதவியுடன் விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிறு தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் செயற்றிட்டத்திற்கு 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சிறு தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்காக கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு நாடளாவிய ரீதியில் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வருடம் மேற்கொண்டு வரும் செயற்றிட்டத்திற்கென 600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக் கூடிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு உதவியளித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் இதன்கீழ் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# முஸ்லிம் மக்களை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை சிங்கள அரசு ஆரம்பித்து நடத்தி வருகிறது

## நாடு கடந்த தமிழீழ அரசு குற்றச்சாட்டு



(லண்டன்)

ஈழத் தமிழினத்தின் மீது பாரிய இன அழிப்பை மேற்கொண்டு தமிழ் மக்களை அடக்கியாளும் இலங்கை அரசின் பின்னணியில் அடுத்த கட்டமாக முஸ்லிம் மக்களை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை சிங்கள அரசு ஆரம்பித்து நடத்தி வருகிறது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் வி. உருத்திரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் வன்முறையை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்களுக்கு எமது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். உடனடியாக முஸ்லிம்களின் பாதுகாப்பையும், இயல்பான வாழ்வையும் உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் அதற்கு ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

ஈழத் தமிழருக்கு எதிராகத் தரைப்படை, கடற்படை, வான்படை என்பனவற்றைக் கொண்ட முழு அளவிலான இராணுவப் பலப் பிரயோகத்தின் மூலம் பாரிய இன அழிப்பை மேற்கொண்டு தமிழ் மக்களை அடக்கியாளும் பின்னணியில் அடுத்த கட்டமாக முஸ்லிம் மக்களை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை சிங்கள அரசு ஆரம்பித்து நடத்தி வருகிறது.

தமிழ் மக்கள் இராணுவ ரீதியான இனப்படுகொலையின் மூலம் அழிக்கப்பட்டதால் உற்சாகம் அடைந்த சிங்கள அரசு அடுத்த கட்டமாக முஸ்லிம் மக்கள் மீது தனது வன்முறையை குண்டர்கள்மூலம் கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.

தமிழரை முள்ளிவாய்க்காலில் நசுக்கியதைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களுக்கான பாதுகாப்பின்மையும் ஆரம்பமாகியது.

சீன அரசுடன் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட யுத்தகால உறவின் தொடர்ச்சியாக இலங்கைக்கு சீனாவின் பொருளாதார ரீதியான நிதி, மூலதன ரீதியான உதவிகள் கிடைத்ததும் அதன் பின்னணியில் வர்த்தக வாய்ப்புக்களும், ஏனைய பொருளாதார வாய்ப்புக்களும் உருவாகியதும் கவனத்துக்குரியவை.

சேவைத்துறைகள், தெருக்கள், புகையிரதவீதி, உல்லாச விடுதிகள், சுற்றுலாப் பிரயாண மையங்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புக்கள் என்பன பெருகிய நிலையில் அவை முஸ்லிம் வர்த்தகர்களின் கைக்குப் போவதைக் கண்டு கொதிப்படையும் சிங்கள வர்த்தகர்கள் அந்த வர்த்தக வாய்ப்புக்களை தம்வசமாக்குவதற்காக முஸ்லிம் எதிர்ப்பு உணர்வை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பதும் வன்முறையின் மூலம் முஸ்லிம் வர்த்தக சமூகத்தை முடக்க முற்படுவதும் தெரிகிறது.

தமிழ் மக்களின் மத்தியில் இருந்த ஆயுதப் போராட்டம் சிதைக்கப்பட்டு தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் முஸ்லிம்களை நோக்கி தென்னிலங்கையில் வன்முறைகள் வெடிக்கத் தொடங்கின.

குறிப்பாக ராஜபக்ஷ அரசாங்க ஆதரவு சிங்கள வர்த்தகர்கள் இவற்றிற்கான ஊற்றாய் அமைந்தனர். இந்நிலையில் பௌத்த மகா சங்கத்தின் உதவியுடன் முஸ்லிம் எதிர்ப்பை முதன்மைப்படுத்தி 2014ஆம் ஆண்டு அளுத்கமவில் பாரிய முஸ்லிம் எதிர்ப்புக் கலவரம் வெடித்தது.

ஈழத்தமிழர்கள் வடக்கு-கிழக்கில் செறிந்து ஒரு தாயக தொடர் நிலப்பரப்பில் வாழ்கின்றனர். தமிழருக்கு எதிரான வன்முறைகள் தெற்கில் வெடித்த போது தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு நோக்கி நகர்ந்தனர்.

ஆதலால் அவர்களை வடக்கு, கிழக்கில் அழிப்பதற்கு முழு அளவில் இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

ஆனால் முஸ்லிம் மக்களின் நிலை வேறு. மொத்த முஸ்லிம் மக்கள் தொகையில் 52 வீதமானோர் தெற்கில் சிதறுண்டு வாழ்கின்றனர்.

அதைவிட கிழக்கில் அம்பாறையில் அவர்கள் செறிந்து வாழ்ந்தாலும் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் அங்கு மூன்றில் ஒருபங்கு சனத்தொகையில் சிங்கள குடியமர்வு உருவாகியது.

சிங்கள பொலிஸ், இராணுவ, புலனாய்வுத்துறை மற்றும் நிர்வாக ஆதிக்கத்தின் மூலம் அம்பாறையில் முஸ்லிம்களை ஒடுக்குவதற்கான வாய்ப்புக்களை சிங்கள இனம் பெற்றிருந்தது.

தெற்கிலே சிதறுண்டு வாழும் முஸ்லிம்களை குண்டர்கள் மூலம் ஒடுக்குவது இலகுவானது என்ற நிலையில் சிங்கள இனவாதம் குண்டர் அரசியலை முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அதாவது தமிழருக்கு எதிராக இராணுவ வன்முறையும், முஸ்லிம்களுக்கு எதிராக குண்டர் வன்முறையும் என அதன் வன்முறைப்போக்கு அமைந்துள்ளது.

முஸ்லிம்கள் செறிந்துள்ள அம்பாறை மாவட்டத்தில் மூன்று வாரங்களுக்கு முன் குண்டர்கள் மூலம் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள இனவாத சக்திகள் முஸ்லிம்களின் இரண்டாவது பலம் பொருந்திய இடமான கண்டியில் இவ்வாரம் தமது வன்முறைகளைப் பரப்பியுள்ளனர்.

இது வெறும் தற்செயலாக நடந்த ஒன்றல்ல. ஒரு வீதி விபத்தை சாக்காகக் கொண்டு ஒரு பெரும் வன்முறையை முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டுள்ளதே உண்மை. இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மற்றும் பெரும் கட்டடங்கள், குடியிருப்புக்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதுவரை 2 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் பதிவான தகவல்களும் உண்டு. சிங்கள-பௌத்தர்களுக்கு அடுத்த பெரிய இனமான ஈழத்தமிழர்களை அழிப்பது அவர்களின் முதலாவது நிகழ்ச்சி நிரலாக இருந்தது.

இக்கால கட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களைப் பிரித்தாளும் வகையில் இரு இனங்களுக்கும் இடையே திட்டமிட்ட பகைமைகளை சிங்கள ஆட்சியாளர்கள் அரசியல் ரீதியாகவும், புலனாய்வுத்துறையினர் வாயிலாகவும் மேற்கொண்டதையும் நாமறிவோம்.

இத்தகைய பின்னணியில் தமிழர்களும், முஸ்லிம்களும், ஏனைய இனங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே சிங்கள-பௌத்த இனஅழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து தற்காப்பை மேற்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் முஸ்லிம்களுக்கு அனுசரணையாகவும், ஆதரவாகவும் இருக்க வேண்டியதுடன் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து பலம் பொருந்திய சக்தியாக செயற்பட வேண்டிய வரலாற்று அவசியமும் இன்று ஏற்பட்டுள்ளது.

இத்தருணத்தில் முஸ்லிம் சகோதரர்களோடு நாம் ஒருமைப்பட்டு நிற்கின்றோம் என்பதையும் முஸ்லிம் மக்களோடு தோளோடு தோள் நின்று அவர்களின் பாதுகாப்புக்காக பாடுபடுவோம் என்பதையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது என தெரிவித்துள்ளார். (இ-7)

## புதையல் தோண்டிய 6 பேர் கைது

(கொழும்பு)

கிறியுள்ள கல்ஹேன் சந்த பிரதேசத்தில் நபர் ஒருவரின் காணியில் நேற்று அதிகாலை புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டிய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் கைது செய்யப்பட்ட வேளையில் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் கிறியுள்ள, புத்தளம், தெனியாய, நவகமுவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## வன்முறைகள் தொடர்கின்றன

## புத்தளத்தில் கடை எரிப்பு!

(புத்தளம்)

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் உணவகம் ஒன்றுக்கு நேற்றுக் காலை தீவைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான உணவகம் ஒன்றுக்கே இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன், சேத விபரங்கள் குறித்தும் எவையும் வெளியாகவில்லை.




கடந்த வாரம் கண்டி பகுதியில் ஏற்பட்ட வன்முறை காரணமாக முஸ்லிம் வர்த்தகர்கள் பலரின் கடைகள் எரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நாட்டில் அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நல்லிணக்கத்தைப் பாதிக்கும் அரசின் சில நடவடிக்கைகள்

### குளோபல் தமிழ் போரம் விசனம்



(லண்டன்)

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குளோபல் தமிழ் போரம் அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடும்போக்கு வாதம் வலுப்பெற்று வரும் அதேவேளை, மத்தியஸ்த கொள்கைகள் பலவீனமடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

அளித்த வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமையே, அண்மையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் பின்னடைவை எதிர்நோக்கக் காரணம் என தெரிவித்துள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் உரிய முனைப்பு காட்டப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களை அமுல்படுத்துவதிலும் அரசாங்கம் காலம் தாழ்த்தி வருகிறது. சில வரலாற்றுத் தவறுகளை திருத்திக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பொன்னான ஓர் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மைத்திரியின் பெறுமதி இரண்டரை ரூபா

# வன்முறைச் சம்பவங்களுக்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பு

## தம்பர அமிலதேரர் கடும் சாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்கு கொண்டு வர பெரிய பங்களிப்பை வழங்கிய தம்பர அமில தேரர், ஜனாதிபதியை கடுமையாகச் சாடியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சிவில் அமைப்புக்களின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்துள்ளார்.

கண்டி தெல்தெனிய, திகன பகுதிகளில் நடந்த சம்பவங்களுக்கு ஜனாதிபதியே முற்றாக பொறுப்புக் கூறவேண்டும்.

நாட்டில் தற்போதுள்ள ஜனாதிபதி வெறுமனே இரண்டு ரூபா 50 காசு பெறுமதி போன்றவர். மிகவும் கவலைக்குரிய நிலைமையே காணப்படுகிறது.

உலகில் எங்கும் இப்படியான ஜனாதிபதியை நாங்கள்கண்டதில்லை. முதுகெலும்பில்லாத ஜனாதிபதி.

உண்மையில் கூறுவதாயின் நாட்டின் சட்டத்தை சரியாக முன்னெடுத்துச் செல்லும் பிரதான பொறுப்பு ஜனாதிபதிக்குரியது.

அதனை அவரால் செய்ய முடியாது என்றால், பதவியில் இருந்து விலகி விட வேண்டும். செய்தால் சரியாக செய், இல்லையென்றால் அப்பால் போய்விடு. ஜனாதிபதி முழு நாட்டையும் அழிக்கின்றார்.

முழு நாட்டுக்கும் பிணியாக மாறியுள்ளார். முழு நாட்டையும் சீரழித்துள்ளார். தேசிய ஐக்கியம் இல்லாத நிலைமைக்கு நாட்டை கொண்டு சென்றுள்ளார்.

அங்கும் சாய்கிறார், இங்கும் சாய்கிறார். கதைப்பதில் மிகவும் திறமையானவர். எனினும் நடவடிக்கை எடுக்க முடியாத முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்.

நாங்கள் ஆட்சியில் அமர்த்தி செய்யுமாறு கூறிய விடயங்களை தவிர்த்து ஏனைய அனைத்தையும் செய்துள்ளார்.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குமாறு முழு ஐக்கிய தேசியக் கட்சியும் கூறியிருந்தும் அதனை செய்யவில்லை.

காரணம் ஜனாதிபதி திருடர்கள், கொலையாளிகளுடன் இருக்கின்றார். ஜனாதிபதி ஒரு திருடன்,கொலைக்காரன் என நாங்கள் நேரடியாக கூறுகிறோம்.

திருடர்களையும், கொலையாளிகளையும் பாதுகாக்கும் ஜனாதிபதியே இன்று ஆட்சியில் இருக்கின்றார். இதனால், ஜனாதிபதி மீது 5 சதத்திற்கும் நம்பிக்கை கொள்ள வேண்டாம் என முழு உலகத்திற்கும் கூறுகிறோம்.

அவர் முற்றாக உடன்பாடுகளுடன் வாழ்கிறார். அவர் அணியும் வெள்ளை ஆடையால் ஒரு சதத்திற்கும் பிரயோசனமில்லை.

மோசடியான ஜனாதிபதி ஆட்சியில் இருக்கின்றார் என்று நாங்கள் அச்சமின்றி கூறுகின்றோம். நாங்கள் சில விசாரணைகளை மேற்கொண்டோம்.

ஜனாதிபதி தொடர்ந்தும் திருடர்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டிலேயே இருந்துள்ளமை தெரியவந்துள்ளது என அவர் மேலும் குற்றச் சாட்டுக்களை அடுக்கியுள்ளார். (இ-7)

## நிர்க்கதியானோருக்கு நிவாரணம் சேகரிப்பு



(ஏறாவூர்)

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களில் தூண்டிவிடப்பட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ளவர்களுக்காக ஏறாவூர் உலமா சபையின் அனுசரணையுடன் ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் தொண்டர்கள் இணைந்து நிவாரண சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக ஏறாவூர் பள்ளிவாசல்கள்,முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவரும் தாழங்குடா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான அஷ்ஷெய்ஹ் எம். எல். அப்துல்வாஜித் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏறாவூர் நகர மற்றும் அயற்புறங்களிலுள்ள பள்ளிவாசல்களில் கடந்த சில தினங்களாக பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி அகதி முகாமிலுள்ள ஏழைகளுக்கு உதவுமாறு அடிக்கடி ஒலிபெருக்கிகளில் உதவி கோரும் அறிவிப்புச் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் உலர் உணவுப் பொருட்களாக அரிசி, பருப்பு, சீனி, பால்மா, ரின் மீன் என்பனவற்றையும் அன்றேல் பணத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கமைவாக பொதுமக்களும் பரோபகாரிகளும் பொது அமைப்புக்களும் பணம் மற்றும் உலருணவுப் பொருட்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

இவற்றைச் சேகரித்து கண்டி மாவட்டத்தில் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு அகதி முகாமில் தஞ்சமடைந்திருக்கும் தொழிலாளர் களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று கையளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேச பள்ளிவாசல்களிலும் குறிக்கப்பட்ட இடங்களிலும் நிவாரண சேகரிப்பு மையங்கள் மூலம் நிவாரணங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1354

Search for people, places and things Nagendram Home

### லதுவி

மனைவி: உங்களைப் பார்க்காமலே கல்யாணத்துக்கு ஓகே சொன்னேன். நான்தான் தியாகி



கணவர்: உன்னைப் பார்த்த பின்னாலும் கல்யாணத்துக்கு ஓகே சொன்னேன் நான்தான் பெரிய தியாகி

### ஹர்ஷா

அருகில் இருந்தும் பேச முடியவில்லை... உரிமை இருந்தும் கேட்க முடியவில்லை...



ஏனென்றால் இது எக்ஸாம் ஹோலாம்.... என்ன கொடுமை சரவணன் இது...

### சோபா

நான் உங்கம்மாவை காதலிச்சதுக்காக என்னை கட்டி வைச்சு அடிச்சாங்க தெரியுமா...? வதுலப்பா கட்டி வைச்சாங்க, யாரப்பா அடிச்சது.



என்ன அடிக்கிறதுக்காகவே உங்க அம்மாவை கட்டிவைச்சாங்க

### திஷான்

எல்லோர் வாழ்க்கையிலும் இந்த ஒரு சீன் வந்து போகும்...



முன்னாள் காதலி அவ புருசன்கூட போறது

### மனோ

மனைவி தனியா அம்மா வீட்டுக்கு கிளம்பும் போது கணவன் முகத்தில கடுகளவு புன்னகை தென்பட்டாலும்



பயணம் இரத்துச் செய்யப்படுகிறதாம் என ஆய்வு சொல்லுது

### லக்ஷி

இதுதான்பா ஒரிஜினல் டோர் டெலிவரி...



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# திடீரென வீசிய சுழல் காற்றால் வீடுகளின் கூரைத்தகடுகள் சேதம்



(தலவாக்கலை)

திடீரென வீசிய சுழல் காற்றினால் குடியிருப்புகளின் கூரைத் தகடுகள் சேதமாகியுள்ளன.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் மாதிரி கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திடீரென வீசிய சுழல் காற்றால், சில குடியிருப்புகளின் கூரைத் தகடுகள் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திடீரென ஏற்பட்ட இந்த சுழல் காற்றால் சில குடியிருப்புகளின் கூரைகள் சேதமடைந்துள்ளதோடு, இப்பகுதியில் காணப்பட்ட சில மின்சார தூண்களும் காற்றால் சாய்ந்து கீழே விழும் அபாய நிலை தோன்றியுள்ளது.

எனவே இது தொடர்பாக இப்பிரதேச மக்களால் தலவாக்கலை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள குடியிருப்புகளுக்கும், வீட்டு உபகரணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இருந்தும் சேதமடைந்த சில குடியிருப்புகளின் கூரைகளை, அயலவர்களின் உதவியோடு குடியிருப்பாளர்கள் சரிசெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# பேஸ்புக்கை கட்டுப்படுத்துவது அவசியம்
## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

சமூக வலைத்தளமான பேஸ்புக்கை கட்டுப்படுத்துவது அவசியம் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"கண்டி மாவட்டத்தில் பரவிய வன்முறைகளை அடுத்து முடக்கப்பட்ட சமூக வலைத்தளங்களுக்கான தடையை நீக்கும் தினம் குறித்து அரசாங்கம் ஏன் இதுவரை தீர்மானங்களை எடுக்கவில்லை?" என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் முற்றாக பேஸ்புக்கை நீக்கியுள்ளன. இதற்கு சீனா சிறந்த உதாரணம்.

இதனை கட்டுப்படுத்த வேண்டிய தேவை எமக்கும் உள்ளது. இது குறித்த மக்களின் நிலைப்பாட்டை கண்டறிய வேண்டும். நாட்டுக்கு நல்ல தென்றால் பிரச்சினை இல்லை. நாட்டுக்கு பிரச்சினையாக இருக்குமாயின் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். தடைசெய்யப்படுவதைவிட பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தலாம் எனவும் அமைச்சர் அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'போதையை ஒழிப்போம்' விழிப்புணர்வு பேரணி









(கொழும்பு)

போதையை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணியும், அரங்க நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்றது.

கோப்பாய்மத்தி கிராம உத்தியோகத்தர் க.அனுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணி கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பித்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வரை பேரணியாக சென்று கல்லூரி அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி இந்துஜன் உட்பட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். (இ-9)

# மாகாணசபைத் தேர்தலுக்கு ஆயத்தமாகி வரும் மகிந்த அணி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மாகாணசபை தேர்தலுக்கு ஆயத்தமாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மாகாணசபை தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முன்னாள்அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளமாகாண சபை தேர்தல்கள் விகிதாசார அடிப்படையிலோ அல்லது தொகுதி வாரியாக நடத்தப்பட்டாலோ அதனை எதிர்நோக்கத் தயார் என அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் போன்றே மாகாண சபை தேர்தலுக்கும் வியூகம் வகுக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வைத்தியர் விடுதி இடிந்து வீழ்ந்தது

(கொழும்பு)

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை பகுதியில் உள்ள வைத்தியசாலையின் வைத்தியர் விடுதி, நேற்று முன்தினம் இடிந்து வீழ்ந்துள்ளதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

துறைநீலாவணை அரசினர் வைத்தியசாலையின் வைத்தியர்கள் தங்குவதற்காக, 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டது.

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக, இவ்விடுதியில் வைத்தியர்கள் தங்காமல் கைவிடப்பட்டதால் இவ்வைத்தியர் விடுதி பாழடைந்த நிலையில் காணப்பட்டது.

இந்நிலையிலேயே, இது உடைந்து விழுந்துள்ளதாக, பொதுமக்கள் தெரிவித்தனர். (இ-7)

# கேள்விப்பத்திர கோரலின்றி அபிவிருத்தி திட்டமொன்றைப் பெற்றது இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் வீதி அபிவிருத்தி திட்டமொன்றை கேள்விப்பத்திரம் கோரலின்றி இந்திய நிறுவனம் ஒன்று பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி - கட்டுகஸ்தோட்டை முதல் கலகெதர வரையிலான வீதியின் வீதி புனரமைப்பு திட்டமே இந்திய நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டையிலிருந்து கலகெதர வரை 4 ஒழுங்கைகளை கொண்ட வீதியை புனரமைத்தல் மற்றும் கட்டுகஸ்தோட்டை நகரத்துக்கு 4 ஒழுங்கைகளை கொண்ட ஒரு புதிய உப வீதியை நிர்மாணித்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கான முதற்கட்ட பணிகளுக்கான அனுமதி அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்ககப்பட்டுள்ளது. (இ-7)

# ஈரானிற்குள் நுழைய முயற்சித்த இலங்கையர்கள் தடுத்து வைப்பு



(கொழும்பு)

அஸர்பர்ஜான் நாட்டிலிருந்து ஈரானிற்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்த நான்கு இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் குழந்தை ஒன்றும் உள்ளடங்குவதாக ஈரான் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இவர்களை கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. உஸ்பெக்கிஸ்தான் பிரஜை ஒருவரும் கடந்த வெள்ளி குறித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் மத்திய ஆசியாவிலிருந்து ஈரானிற்கு நுழைய முயற்சித்த பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இலங்கை பிரஜைகள் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை. (இ-7)

# முஸ்லிம்கள் தீவிரவாத சிந்தனை கொண்டவர்கள் அல்லர்

## அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் அமைச்சர் றிசாத் எடுத்துரைப்பு





(கொழும்பு)

முஸ்லிம்கள்தங்கள் உயிரினும் மேலாக மதிக்கும் பள்ளிவாசல்களை இனவாதிகள் மோசமாகத் தாக்கி, உடைத்து, எரித்த போதும் அந்தச் சமூகத்தினர் இன்னும் பொறுமையாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் ஆயுதத்தின் மீதோ, தீவிரவாதத்தின் மீதோ நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர் என்பதையே அது உணர்த்துவதாக, அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தபோது, அமைச்சர் றிசாத் பதியுதீன் தெளிவுபடுத்தினார்.

சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில், நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட குழுவில் அங்கம் வகித்திருந்த அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவிததார்.

இந்தக் குழு அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களை தனித்தனியாகச் சந்தித்திருந்தது.

சபாநாயகர் தலைமையிலான குழுவில் அமைச்சர்களான றிசாத் பதியுதீன், மனோ கணேசன், கயந்த கருணாதிலக, சுசில் பிரேம ஜயந்த, ரஞ்சித் மத்தும பண்டார, பௌசி ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், திலங்க சுமதிபால, அலி சாஹிர் மௌலானா, விஜித ஹேரத் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் மகாநாயக்க தேரர்கள், வில்பத்துக் காட்டைஅமைச்சர் றிசாத் அழித்து மக்களை குடியேற்றுவதாக ஒரு குற்றச்சாட்டு இருப்பதாக தெரிவித்த போது, அமைச்சர், அதற்கும் தேரர்களிடம் விளக்கமளித்தார்.

"சுமார் 25 வருடங்களுக்கு முன்னர், வட மாகாணத்திலிருந்து வெளியேறிய முஸ்லிம்கள், தாம் வாழ்ந்த இடங்களில் மீண்டும் மீளக் குடியேறுவதற்காக, அவர்கள் வாழ்ந்த காணிகளில் வளர்ந்திருந்த காடுகளை துப்புரவாக்கிய போது, இந்தக் குற்றச்சாட்டுஎன்மீது எழுந்தது.

நானும் வட-மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு அகதியே. இனவாத நோக்கத்தில் மீள்குடியேற்றத்தைத் தடுப்பதற்காக வேண்டுமென்றே இவ்வாறான கதைகளை பரப்பி வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை குழுவொன்றை நியமித்து, அந்த விசாரணை அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட போதும், இதுவரை அது வெளிப்படுத்தப்படவில்லை. சபாநாயகரிடமும் இந்த விவகாரத்தின் உண்மைத்தன்மையை அறிவதற்காக, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து, விசாரணை செய்யுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். தவறு இருந்தால் உரியவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள் வேண்டியுள்ளோம்.

இனவாதிகள் இல்லாத பொல்லாத விடயங்களைக் கூறி, முஸ்லிம்கள் மீது வீண் பழி போடுகின்றனர். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் ஒருபோதும் தவறு செய்யவில்லை என்று அமைச்சர் றிசாத் தெரிவித்தார்.(இ-281)

---

### மைத்திரி–ரணில்–மகிந்த இடையிலான

# அதிகாரப் போட்டி தான் இனவாதத் தீ பரவக் காரணம்

### லெனினிச கட்சி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இன, மத வெறுப்புகளும் கொடிய வன்முறைகளும் காலத்திற்குக் காலம் கொழுந்துவிட்டு எரிய வைக்கப்பட்டு வந்துள்ளன. தத்தமது ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் வைத்திருக்கவும் அதனை நீடித்து உறுதிப்படுத்தவும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் மீதான கொடிய இன, மத வன்முறைகள் அவ்வப்போது நிகழ்த்தப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியில் ஒன்றே கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதியன்று அம்பாறை நகரில் முஸ்லிம் கடைகள், பள்ளிவாசல் மீது தொடுக்கப்பட்ட இனவெறித் தாக்குதலாகும். இதன் தொடர்ச்சியே இம் மாதம் 4ம் திகதி கண்டியின் தெல்தெனியவில் ஆரம்பித்து திகன பிரதேசத்தில் நிகழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களும் எரியூட்டல்களுமாகும்.

இதற்கு நல்லாட்சியின் பெயரிலான மைத்திரி, ரணில் தலைமையிலான பேரினவாத ஆட்சியாளர்களும் எதிர்த் தரப்பிலிருந்து பேரினவாதத்திற்கு எண்ணெய் ஊற்றி வரும் மகிந்த தலைமையிலானவர்களும் பொறுப்பாளிகளாவர் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.க.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், இன்று திகனவில் நடைபெறுவது நாளை மீளவும் வேறொரு பிரதேசத்தில் நிகழுவே செய்யும். எனவே, முஸ்லிம் மக்களுக்கு இன்று நிகழ்த்தப்பட்டு வரும் திட்டமிட்ட தாக்குதல்களையும் எரியூட்டல்களையும் எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளை இவற்றுக்கு எதிராக அனைத்து உழைக்கும் மக்களும் நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் தமது ஒன்றுபட்ட கரங்களையும், குரல்களையும் உயர்த்தி முன்செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றது.

கடந்த காலத்தில் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்கெதிரான ஒவ்வொரு பேரினவாதத் தாக்குதல்களுக்குப் பின்னாலும் இரண்டு பிரதான ஆளும் வர்க்கக் கட்சிகளும், அவர்களோடு இணைந்தவர்களுமே இருந்து வந்துள்ளனர். அதே போன்றே நல்லாட்சி நல்லெண்ண முகமூடிகளை அணிந்து நிற்கும் கூட்டாட்சியானது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது கையறு நிலையில் மக்களின் கவனத்தை திசை திருப்ப வழமை போன்று பேரினவாதத்திற்குள் புகுந்து நிற்கின்றனர். அத்துடன் மைத்திரி- ரணில் - மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையிலான அதிகாரத்திற்கான போட்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதத் தீ பயன்படுகிறது.

ஒரு புறத்தில் நாடும் மக்களும் நவகொலனிய, நவதாராளவாத உலகமயத்தால் விழுங்கப்படுகின்றனர். மறுபுறத்தில் அந்நிய சக்திகளுக்கு நாட்டைத் திறந்து வளங்களைத் தாரை வார்த்து தத்தமது ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்த ஆளும்வர்க்க சக்திகள் போட்டியிட்டு நிற்கிறார்கள். இந்த உண்மையை மறைக்கவும் அந்தந்த இன மக்களை அவர்கள் சார்ந்த அடையாளங்களுக்குள் வைத்திருக்கவும், ஆளும் வர்க்கத்தினரும் அவர்களது எசமானர்களான அந்நிய சக்திகளும் முன்னின்று செயற்பட்டு வருகிறார்கள். அதன் மூலம் இவர்கள் தத்தமது உயர்வர்க்க மேட்டுக்குடி நலன்களை பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

இவற்றை உணர்ந்து அனைத்து இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் உழைக்கும் மக்கள் அனைவரும் வர்க்க ரீதியில் ஒன்றிணைந்து முன்செல்வது பற்றி அரசியல் அடிப்படையில் சிந்திப்பது அவசியமாகும். அதேவேளை, நாட்டின் நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் அணிதிரண்டு, ஏவப்படும் பேரினவாதத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டி முன்செல்ல வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகிறது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

### தொற்றா நோய்களிலிருந்து பாதுகாக்க

# மாணவர்களுக்காக கூட்டு வேலைத்திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவ, மாணவிகளை தொற்றா நோய்களிலிருந்து பாதுகாக்கும் கூட்டு வேலைத்திட்டத்தை கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து முன்னெடுத்து வருவதாக, சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிமின் சிரேஷ்ட ஆலோசகரும் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல், கல்வியமைச்சில் இடம்பெற்றதாகவும், இதில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்கள் புகைத்தலுக்கும், மதுபானத்துக்கும் அடிமையாவதில் இருந்து தடுப்பது பற்றி மிக விரிவாக ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மதுபாவனை என்பது இன்றைய காலகட்டத்தில் ஒரு சர்வ சாதார்ணமான செயற்பாடாகவே மாறிக் காணப்படுகின்றது. அதிலும், இளம் வயதினர்களில் பாடசாலை மாணவர்களே அதிகமாக இப்பழக்கத்துக்கு அடிமையாகிக் காணப்படுகின்றனர். இதனை கவனத்திற்கொண்ட எமது அரசாங்கம் மது ஒழிப்பு சம்பந்தமான பல்வேறுபட்ட விழிப்பூட்டல் நிகழ்வுகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புகள் என்பவை முன்னெடுத்து வருவதைக் காணலாம்.

இதற்கமைய, ஒரு கூட்டு வேலைத் திட்டத்தை கல்வியமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன. இந்த வேலைத் திட்டத்தினூடாக, பாடசாலை மாணவர்கள் புகைத்தலுக்கும், மதுபானத்துக்கும் அடிமையாவதில் இருந்து தடுக்க முடியும். அதனூடாக மாணவர்களின் கல்வியில் பாதிப்பு, இளைய சமுதாயத்தின் சீரழிவு, அடிமைத்தனமான சமூக உருவாக்கம்போன்றபல பிரச்சினைகளில் இருந்து தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# மகளிர் தினத்தை அரச விடுமுறையாக அறிவிக்க கோரல்

(கொழும்பு)

மகளிர் தினத்தை அரச விடுமுறை நாளாக அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வெளியிட்டுள்ள பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணியால் வெளியிடப்பட்டுள்ள அந்த பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"சர்வதேச மகளிர் தினத்தை பல மேற்குலக நாடுகள் விடுமுறை தினமாக அறிவித்துள்ளது. இதேபோன்று, மகளிரைக் கௌரவப்படுத்தி மகளிர் தினத்தை அரச விடுமுறை நாளாக இலங்கை பிரகடனப்படுத்தவேண்டும்.

"மேலும், பெண்கள், சிறுவர்களுக்கான வன்முறைகளுக்கெதிரான விசாரணைகள் மேற்கொள்வதற்கும், துரிதமான தீர்வு பெற்றுக் கொடுப்பதற்குமாக தனியான நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும்.

"யுத்தத்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி தொடர் போராட்டங்களை நடத்திவரும் பெண்களின் கதறல்களுக்கு நல்லாட்சி அரசாங்கம் செவி மடுத்து தீர்க்கமான தீர்வு பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

"பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் மிக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

"கிழக்கு, வடக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதியிலுமுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் யுத்தத்தில் நேரடியாக பங்கேற்ற முன்னால் பெண் போராளிகளின் வாழ்வாதார மறுமலர்ச்சிக்காக அரசாங்கம் விசேட செயற்றிட்டங்கள்ள நடைமுறைப்படுத்த வேண்டும்.

"இடுகாட்டுச்சட்டத்தின் அடிப்படையில் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வரும் அட்டப்பள்ளத்தில் பொது மயானத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொது மயானமாக பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

10.03.2018 தொடர்ச்சி...

## குள்ளநரியும் சிங்கராஜாவும்



அது சிங்கத்தின் அருகில் வந்ததும், "மன்னா! ஏதேனும் உதவி செய்யுங்கள். சற்றும் தாமதிக்கக் கூடாது. இதோ இரு புறமும் உயர்ந்து நிற்கின்ற பாறைகள் இன்னும் சற்று நேரத்தில் உடைந்து கீழே விழப்போகின்றன. பாறைகள் நம்மீது விழுந்தால், நாம் இருவரும் அடியில் சிக்கி இறந்து போவோம். பலசாலியான சிங்க ராஜாவே! நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற முடியும்!" என்று பயத்தோடு சொல்வதுபோல கூறியது.

கூடவே, அது தன் கால் பாதங்களை உயர்த்தி தன் தலையை மூடிக்கொண்டு, மிகவும் பயப்படுவது போல நடித்தது.

சிங்கம் தன் தலையை உயர்த்தி, இருபுறம் உயர்ந்திருந்த பாறைகளைப் பார்த்தது.

பலசாலி சிங்கராஜாவே என்று குள்ளநரி தன்னை அழைத்ததால், சிங்கத்தின் மனதில் கர்வம் வந்துவிட்டது. கர்வம் கொண்ட சிங்கத்திற்கு அறிவும் மழுங்கிவிட்டது.

'இந்தக் காட்டில் நான் தான் பலசாலி! என்னால் மட்டுமே மற்ற விலங்குகளைக் காப்பாற்ற முடியும்" என ஆணவத்துடன் பேசியது சிங்கம். உடனே தன் தோள்களைப் பாறைகளின் மீது சாய்த்து, பாறைகளைத் தாங்கிக்கொண்டது.

அதனைக் கண்ட குள்ளநரி, "நன்றி ராஜா! நன்றி! உங்களைப் போன்ற பலசாலியால்தான் இந்தப் பாறையைத் தன் தோள்களால் தாங்கிப் பிடிக்க முடியும். நீங்கள் சற்றுநேரம் அப்படியே பாறைகளைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் ஓடிப்போய் பாறைகளைத் தாங்கிப் பிடிக்க ஏதாவது மரக்கொம்புகளைக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லியபடி, அங்கிருந்து ஓடிச் சென்றது.

குள்ளநரி சொன்னதை நம்பி சிங்கமும் வெகுநேரம் அப்படியே பாறைகளைத் தன் தோள்களால் தாங்கியபடி நின்றது. வெகுநேரம் குள்ளநரி வராமல் போகவே, சிங்கம் யோசிக்க ஆரம்பித்தது.

'ஆஹா! உறுதியாக நிற்கிற பாறைகள் கீழே விழுவதாகத் தந்திரமாடி, குள்ளநரி என்னை மீண்டும் ஏமாற்றிவிட்டதே' என்று புரிந்துகொண்ட சிங்கம், கோபத்தோடு அங்கிருந்து கிளம்பிச் சென்றது.

இப்படியே எத்தனை முறை குள்ளநரி சிங்கத்தை ஏமாற்றியதே? தெரியாது. ஆனால், சிங்கத்திடமிருந்து அது இப்படித்தான் உயிர் தப்பிக்கொண்டு இருக்கிறது.

**முற்றும்.**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2018 12

- 222-உரோமைப் பேரரசர் எலகபாலுசு கிளர்ச்சி ஒன்றின் போது அவரது தாயாருடன் சேர்த்து பிரடோரியர்களால் படுகொலை செய்யப்பட்டார். இவர்களது உடல்கள் உரோமை நகர வீதிகளால் கொண்டு செல்லப்பட்டு டைபர் ஆற்றில் வீசப்பட்டன.
- 1702-முதல் ஆங்கில நாளிதழான தி டெய்லி குராண்ட் லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1784-மங்களூர் உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்து இரண்டாவது ஆங்கிலேய மைசூர் போர் முடிவுக்கு வந்தது.
- 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது.
- 1902-இலங்கையில் காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.
- 1905-இலங்கையில் காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரை புகையிரதப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தது.
- 1917- முதலாம் உலகப் போர்: பக்தாத் ஜெனரல் ஸ்டான்லி மோட் தலைமையிலான ஆங்கிலோ-இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் பொம்மை அரசு வியட்நாம் இராச்சியம் பாவோ தாய் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1983-பாகிஸ்தான் அணு ஆயுதத்தை வெற்றிகரமாக சோதித்தது.
- 1998-திருகோணமலைத் துறைமுகத்தில் கரும்புலிகள் இலங்கையின் ரோந்துப் படகொன்றை மூழ்கடித்தனர்.

### பிறப்புகள்

- 1898-சித்பவானந்தர், இராமகிருஷ்ண குருகுல மரபைச் சேர்ந்த துறவி (இ. 1985)
- 1913-சக்தி கிருஷ்ணசாமி, தமிழக எழுத்தாளர், பாடலாசிரியர், திரைக்கதை ஆசிரியர் (இ. 1987)
- 1922-அப்துல் ரசாக் உசேன், மலேசியாவின் 2வது பிரதமர் (இ. 1976)
- 1931-ரூப்பர்ட் மர்டாக், அவுஸ்திரேலிய-அமெரிக்கத் தொழிலதிபர்
- 1936-ஹெரால்டு சூர் ஹாசென், நோபல் பரிசு பெற்ற செருமானிய நச்சுயிரியலாளர்
- 1952-டக்ளஸ் ஆடம்ஸ், ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 2001)
- 1985-அஜந்த மெண்டிஸ், இலங்கைத் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1863-ஜேம்சு ஒற்றம், ஆங்கிலேய இராணுவ அதிகாரி (பி. 1803)
- 1955-அலெக்சாண்டர் பிளெமிங், நோபல் பரிசு பெற்ற இசுக்கொட்டிய உயிரியலாளர் (பி. 1881)
- 1967-வெ. அ. சுந்தரம், இந்திய விடுதலை இயக்க செயற்பாட்டாளர் (பி. 1896)
- 1971-பைலோ பார்ன்சுவர்த், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (பி. 1906)
- 1979-ஆர். அனந்த கிருஷ்ணர், ஆந்திர கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1893)
- 1997-திக்குறிசி சுகுமாரன், மலையாள இயக்குநர், நடிகர், தயாரிப்பாளர் (பி. 1916)
- 2002-ருடால்ப் ஹெல், செருமானியக் கண்டுபிடிப்பாளர் (பி. 1901)
- 2009-ஓமக்குச்சி நரசிம்மன், தமிழ்த் திரைப்பட நடிகர்
- 2012-த. ஆனந்தமயில், ஈழத்து எழுத்தாளர் (பி. 1947)
- 2013-சு. சபாரத்தினம், ஈழத்துப் பத்திரிகையாளர், எழுத்தாளர் (பி. 1930)
- 2013-ஸ்ரீபாத பினாகபாணி, இந்திய கர்நாடக இசைப் பாடகர், மருத்துவர் (பி. 1913)
- 2013-வே. தில்லைநாயகம், நூலகவியலாளர், தமிழறிஞர். (பி. 1925)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (லித்துவேனியா, சோவியத் ஒன்றியத்தில் இருந்து, 1990)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 50 | 60 | 70 | 80 | 50 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 | 35 |
| கோவா | 30 | 30 | 30 | 70 | 60 | 25 |
| கரட் | 60 | 80 | 80 | 100 | 120 | 70 |
| பூசணி | 80 | 40 | 40 | 40 | 60 | 45 |
| புடோல் | 60 | 60 | 30 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 50 | 80 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 80 | 100 | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 130 | 140 | 160 | 130 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 50 | 40 | 30 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 550 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 160 | 70 | 220 | 160 | 80 |
| கத்தரிதம்பள்ள | 60 | 30 | 40 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 40 | 80 | 80 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 150 | 130 | 170 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 65 | 100 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 50 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 60 | 80 | 60 |

ஒற்றுமையும் வேற்றுமையும் வேறல்ல இறையின் தரமே – அந்த வேற்றுமையிலும் ஒற்றுமையைக் கண்டுணர்வதே அறிவின் திறம். ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன

உள்ளூராட்சி தேர்தல் முடிந்து சபையைப் பொறுப்பெடுத்தல் என்ற மிகப்பெரிய விடயம் இன்னமும் நிறைவேறாமல் உள்ளது.

எனினும் தேர்தலில் வென்றவர் யார்? தோற்றவர் யார்? ஆட்சி அமைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் யாருக்கு உள்ளது என்பன ஓரளவுக்குத் தெரிந்தாயிற்று.

இது ஒருபுறம் இருக்க, உள்ளூராட்சி சபைத் தேர்தல் கற்றுத் தந்த பாடங்கள் என்ற விடயமே அரசியல் கட்சிகள் மத்தியில் பேசுபடு பொருளாக இருப்பதைக் காணமுடிகின்றது.

அதிலும் குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் தத்தம் தேர்தல் முடிவுகளை வைத்துக் கொண்டு புதுவியூகம் அமைக்கத் தலைப்பட்டுள்ளன.

இதில் தமிழரசுக் கட்சி தேர்தலில் தனக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆழமாக ஆராய்கிறது.

ஏன் பின்னடைவு என்பது ஆய்வுக்குரிய விடயமன்று. ஏனெனில் பின்னடைவுக்கான காரணம் தமிழரசுக் கட்சியினருக்கு நன்கு தெரியும்.

எனினும் துணிந்து நின்று அதனைச் சொல்வதற்கு எவருக்கும் திராணியில்லை என்பதுதான் அங்கிருக்கும் பிரச்சினை.

இருந்தும் அடுத்துவரும் மாகாண சபைத் தேர்தலிலும் இதே கதி என்றால், தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் ஆபத்தானதாகிவிடும்.

எனவே தமக்கு ஏற்பட்ட பின்னடைவை நிமிர்த்தி எடுப்பதற்கான வியூகங்களை அமைப்பது தொடர்பில் அந்தக் கட்சி கடுமையாகச் செயற்பட்டு வருகிறது.

அதில் ஒன்றுதான் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் முன்னாள் வேட்பாளர் க.அருந்தவபாலனைச் சந்தித்து கட்சி நிலைவரம் தொடர்பில் நடத்திய பேச்சுவார்த்தையாகும்.

தமிழ் மக்கள் பேரவையின் மத்திய குழுவில் அருந்தவபாலன் இணைந்து கொண்டார் என்ற தகவல் வெளியாகியதும் இனியும் பொறுத்தால் எல்லாம் அம்போ என்றாகிவிடும் என்ற அடிப்படையில் அருந்தவபாலனைச் சந்தித்துக் கதைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையில் அருந்தவபாலன் இணைந்து கொள்ளாமல் இருந்திருந்தால் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அருந்தவபாலனைச் சந்தித்திருப்பாரா? என்பது ஆராயப்பட வேண்டியது.

எதுஎவ்வாறாயினும் நல்லது நடந்தால் நல்லது என்பதோடு அந்த விடயத்தை ஒத்தி வைத்துக் கொள்ளலாம்.

இப்போது இங்கு நாம் பேச விளைந்தது காணாமல்போனவர்களைத் தேடி அவர்களின் உறவுகள் நடத்தும் தொடர் போராட்டம் பற்றியதாகும்.

வன்னி யுத்தத்தின்போதும் அதற்கு முன்பாகவும் பின்பாகவும் காணாமல்போனவர்களைத் தேடும் உறவுகள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

காணாமல்போன உறவுகளுக்காகக் கண்ணீர் விட்டு ஊன் உறக்கம் மறந்து தவியாய்த் தவிக்கும் எம் உறவுகளைப் பார்க்கும் போதெல்லாம் நம் இதயம் கருகிப் போகும். அந்தளவுக்கு ஒரு துயரம் தொடர்ந்து வருகிறது.

இதுவிடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன. தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி காணாமல்போனவர்களின் விவகாரம் மற்றும் உறவினர்கள் மேற்கொள்ளும் தொடர் போராட்டம் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

எடுத்ததெற்கெல்லாம் கட்சி நலன் என்றிராமல் காணாமல்போனவர்களின் விடயத்துக்கு ஒரு முடிவைக் காண்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வருவது கட்டாயமானதாகும்.

# மோதல்களை தடுப்பது தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு ஆலோசனை

நாட்டில் எந்தவொரு இடத்திலோ அல்லது எவ்வாறான சந்தர்ப்பத்திலோ சம்பவமொன்று ஏற்பட்டால் உடனடியாக அது தொடர்பில் விசாரித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஊடாக அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அனைத்து மாவட்டங்களுக்கும் பாதுகாப்பு குழுவொன்றை நியமிக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தலைமையில் காலி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாதுகாப்பு குழு கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மோதல் நிலையொன்று ஏற்படும் போது பாதுகாப்பினை பலப்படுத்துவதற்காக பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு ஆதரவளிப்பது மாவட்ட அரசாங்க அதிபர்கள் போன்று பிரதேச செயலாளர்களினதும் பொறுப்பு என விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இதன போது தெரிவித்துள்ளார். (மு-1)

# பொய் பரப்புரைகளை செய்த பேஸ்புக் கணக்குகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சமூக வலைத்தளங்கள் ஊடாக இனவாத மற்றும் பொய்யான தகவல்களை பரப்பியவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதுவரை 186 பேஸ்புக் கணக்குகள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் தகவல் தொழிநுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பெரும்பாலானோர் வதந்திகளை பரப்பி வந்துள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள சமூக வலைத்தளங்கள் எதிர்வரும் ஓரிரு நாட்களில் வழமைக்குத் திரும்பும் என அந்த சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (மு-1)

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சமூக வலைத்தளங்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமொன்றை இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சங்கம் முன்னெடுத்தது.

கொழும்பு லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் இடம்பெற்றது. (மு-1)

# துப்பாக்கியுடன் இருவர் கைது

சமயங் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகத்துக்குரியவரான மதுஷ் லக்ஷித எனும் மாகந்துரே மாதுஷின் இரண்டு உதவியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை - வெலிகம - மிதிகமை பிரதேசத்தில் வைத்து அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.


இதன்போது அவர்களிடம் இருந்த துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாதூஷ் எனப்படும் பாதாள குழு தலைவர், தற்போது டுபாயில் தலைமறைவாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு கால விடுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மணிப்புரம் கிராமம், தவசிக்குளம் கிராமம், பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம், வரன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### வீடு கட்டும் வேலையைத் தொடங்க எந்த நட்சத்திரத்தில் கிரகங்கள் இருக்க வேண்டும்?

சூரியன்: பரணி 3, 4 பாதங்களிலும் கார்த்திகை 4 பாதங்களிலும் ரோகினி 1 ஆம் பாதத்திலும் சூரியன் சஞ்சரிக்கக்கூடாது.

செவ்வாய்: கார்த்திகை 4 பாதங்கள், மகம் 4 பாதங்கள், அத்தம் 4 பாதங்கள், ரேவதி 4 பாதங்கள், பூசம் 4 பாதங்கள், பூரம் 4 பாதங்கள், மூலம் 4 பாதங்கள். இந்த நட்சத்திர பாதங்களில் செவ்வாய் சஞ்சரிக்கக் கூடாது.


புதன்: அச்சுவினி 4 பாதங்கள், ரோகினி 4 பாதங்கள், மிருகசீரிடம் 4 பாதங்கள், திருவோணம் 4 பாதங்கள், அத்தம் 4 பாதங்கள், சித்திரை 4 பாதங்கள், இந்த நட்சத்திர கால்களில் புதன் சஞ்சாரம் செய்யும் போது வீடு கட்டத் தொடங்கினால் விரைவில் வீடு முழுமையடையும்.

குரு: உத்தரம் 4 பாதங்கள், உத்தராடம் 4 பாதங்கள், பூராடம் 4 பாதங்கள், திருவோணம் 4 பாதங்கள், உத்தரட்டாதி 4 பாதங்கள், ரோகினி 4 பாதங்கள், மிருகசீரிடம் 4 பாதங்கள், ஆயிலியம் 4 பாதங்கள், பூரம் 4 பாதங்கள். இந்த நட்சத்திரக் கால்களில் குரு சஞ்சாரம் செய்யும் போது வீடுகட்டத் தொடங்கினால் விரைவில் வீடு முழுமையடையும்.

(தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உன்னுள் நான்; என்னுள் நீ



ஒரு கைப்பிடி பயறை எடுத்து ஒரு கோப்பை நீரில் போட்டால் ஒரு சில மணி நேரத்தில் அந்தப் பயறு எல்லாவற்றுக்குள்ளும் தண்ணீர் நிறைந்து விடும். அதே நேரத்தில் பயறும் தண்ணீருக்குள் இருக்கும். அதாவது சுருங்கச் சொன்னால் தண்ணீருக்குள் பயறு, பயறுக்குள் தண்ணீர். அதே போல இருப்பு நிலையான சுத்தவெளியானது எல்லா விண்துகள்களையும் விண்துகள்களாலான பருப்பொருள்களையும் சூழ்ந்தும் ஊடுருவியும் இருக்கிறது. இயக்கக் களமாகிய பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிற இருப்பு நிலையானது. நிழல் அலைத் துகள்க ளால் நிரம்பப் பெற்றிருக்கிறது. ஆகவே, துகள்களுக்கு இடையே உள்ள வெளியானது வான்காந்தக் களமாகத் திகழ்கிறது.

இத்தகைய பிரபஞ்சக் களத்தின் ஒரு சிறு பகுதியில் உள்ள இந்தப் பூமியானது சூரியனைச் சுற்றி வலம் வருகிறது. பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் பரிணமித்து, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்து இறுதியிலே வான்காந்தக் களத்திலே கலக்கின்றன. பிரபஞ்சத்தின் வாழ்க்கையோடு ஒப்பிடும்போது மனிதனுடைய வாழ்க்கை மிகமிகச் சிறியதாகும். மனிதனின் இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்திற்குள் அவனது உடலிலே ஏற்படும் பல்வேறு விந்தைகளை யாரும் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை.

வாழ்க்கையை முழுமையாக நிறைவோடு வாழும் வகையில் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி, பிரபஞ்சத்தின் இயக்கம் இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது நாம் உள்ளுணர்வாக உணரக்கூடிய மூன்று அடிப்படைத் தத்துவங்களான சுத்தவெளி, உயிர்ச்சக்தி, காந்தம் ஆகியவற்றின் சிறப்பை அறியலாம். இந்த மூன்றைப் பற்றியும் ஒருவர் தெளிவாகவும், சந்தேகம் இல்லாமலும் தெரிந்து கொள்வதற்குத் தவறினால் அவர் தத்துவ ஞானத்தையும் சரி, விஞ்ஞானத்தையும் சரி ஆழமாகவும், பூரணமாகவும் தெரிந்து கொள்ள முடியாது.

# ரஹீமின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க இலங்கையை கவனித்தது பங்களாதேஷ்



இலங்கையில் நடைபெறும் முத்தரப்பு தொடரில் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியால் இலங்கையை 5 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வீழ்த்தியது.

இலங்கையில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான நிதாஹாஸ் முத்தரப்பு இருபது- 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தில் இந்தியாவை இலங்கையும், 2-வது ஆட்டத்தில் பங்களாதேஷத்தை இந்தியாவும் வீழ்த்தியிருந்தன.

இந்நிலையில், இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி அணித்தலைவர் மெஹ்முதுல்லா பந்துவீச்சை தேர்வு



செய்தார்.

இலங்கை அணியின் குணதிலக, குசல் மெண்டிஸ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இலங்கை அணி 4.3 ஓவரில் 56 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது குணதிலக 19 பந்தில் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு குசல் மெண்டிஸ் உடன் குசல் பெரேரா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பங்களாதேஷின் பந்து வீச்சை துவம்சம் செய்தது. அணியின் ஸ்கோர் 141 ஓட்டங்களாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. குசல் மெண்டிஸ் 30 பந்தில் 2 பவுண்டரி, 5 சிக்சருடன் 57 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷனகா ஓட்டம் ஏதும் எடுக்காமலும், சண்டிமால் 2 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

குசல் பெரேரா 48 பந்தில் 8 பவுண்டரி, 2 சிக்சருடன் 74 ஓட்டங்கள் குவித்தார். இறுதியில் இலங்கை அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 214 ஓட்டங்கள் குவித்தது. உபுல் தரங்க 15 பந்தில் 5 பவுண்டரி, 1 சிக்சருடன் 32 ஓட்டங்கள் எடுத்து களத்தில் இருந்தார்.

பங்களாதேஷ் சார்பில் முஷ்தபிகுர் ரகுமான் 3 விக்கெட்டும், மகமதுல்லா 2 விக்கெட்டும், தஸ்கின் அகமது ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

அதன்பின்னர், 215 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக தமிம் இக்பாலும், லித்தன் தாசும் களமிறங்கினர். முதலில் இருந்தே அடித்து விளையாடியதால் அந்த அணியின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வந்தது.

அதிரடியாக ஆடிய லித்தன் தாஸ் 19 பந்தில் 5 சிக்சர், 2 பவுண்டரியுடன் 43 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து தமிம் இக்பால் 29 பந்துகளில் ஒரு சிக்சர், 6 பவுண்டரியுடன் 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் களமிறங்கிய முஷ்பிகுர் ரஹீம் பொறுப்புடன் விளையாடினார். அவர் 35 பந்துகளில் 4 சிக்சர், 5 பவுண்டரியுடன் 72ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல்



இருந்தார். இறுதியில், பங்களாதேஷ் அணி 19. 4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 215 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இலங்கை அணி தரப்பில் நுவன் பிரதீப் 2 விக்கெட்டும், துஷ்மந்த சமீரா, திசாரா பெரேரா தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

முத்தரப்பு இருபது-20 தொடரின் அடுத்த போட்டியில் இன்று இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# டெஸ்ட் போட்டியில் இந்தியா சிறக்க கிரிக்கெட் சபை போட்ட திட்டம்

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு முன்பாக, இருபது-20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடும் என பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது.

இந்திய அணி சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை, 1-2 என்ற கணக்கில் இழந்தது. இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில், டெஸ்ட் தொடருக்கு முன்பாக இருபது- 20 மற்றும்ஒருநாள்தொடரில் இந்தியா விளையாடும்என பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது.

பி.சி.சி.ஐயின் தலைமைச் செயல் அதிகாரிராகுல்ஜோஹ்ரி இது குறித்து கூறுகையில்,

அணி நிர்வாகத்தின் கருத்துக்களுக்கு பிறகு, நாங்கள் தீவிரமான முடிவு களை எடுத்துள்ளோம்.

அதன்படி, இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ள இந்திய அணி, அந்த அணியுடன்டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

ஆனால், அதற்கு முன்பாக குறைந்த ஓவர் போட்டிகளான இருபது-20 மற்றும் ஒருநாள் தொடரில் இந்தியா விளையாடும். இதன்மூலம், டெஸ்ட் தொடரில் தீவிரமாக விளையாடுவதற்கு ஏற்ற வாறு வீரர்கள், தங்களை நன்கு தயார்படுத்திக் கொள்வார்கள் என தெரிவித்துள்ளார். (க)

# இலங்கையுடனான வெற்றி பங்களாதேஷ் படைத்த சாதனை

215 ஓட்டங்களை இலங்கைக்கு எதிராக எடுத்து வெற்றி பெற்றுள்ள வங்கதேச அணி புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் சுதந்திர தின கிண்ண இருபது-20 தொடரில் இலங்கை - வங்கதேச அணிகள் மோதின.

முதலில் ஆடிய இலங்கை அணி 214 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து விளையாடிய



வங்கதேச அணி 19.4 ஓவர்களில் 215 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதன் மூலம் சர்வதேச இருபது-20 போட்டிகளில் சேசிங் செய்து வெற்றி பெற்ற 4வது பெரிய ஸ்கோர் இது என்ற புதிய மைல்கல்லை வங்கதேசம் எட்டியுள்ளது.

இத்தோடு வங்கதேசம் சேசிங் செய்து வெற்றி பெற்ற மிக பெரிய ஸ்கோர் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# உத்வேகம் தொடரும் ரகானே நம்பிக்கை

தென்னாபிரிக்க சுற்றுப் பயணம் செய்த இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்தது. அதன்பின் எழுச்சி பெற்ற இந்தியா ஒருநாள் போட்டி தொடரை 5-1 என்ற கணக்கிலும், 20 ஓவர் தொடரை 2-1 என்ற கணக்கிலும் கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா வுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர்.

ஐ.பி.எல். போட்டி தொடருக்கு பிறகு இந்திய அணி இங்கிலாந்தில், சுற்றுப் பயணம் செய்து 5 டெஸ்ட், 3



ஒரு நாள் போட்டி, மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையா டுகிறது.

வெளிநாட்டு சுற்றுப் பயணம் குறித்து இந்திய வீரர் ரகானே பத்திரிகையாளர்களிடம் கூறும்போது,

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 டெஸ்டில் இந்திய பந்துவீச்சாளர்கள் 60 விக்கெட்டையும் வீழ்த்தியது அற்புதமானது.

தென்னாபிரிக்க மண்ணில் சிறப்பாக செயற் பட்டது நல்ல தொடக்கம் ஆகும். இதன்மூலம் வரும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து சுற்றுப் பயணங்களில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கையை அளித்துள்ளது.

அந்த உத்வேகத்தை தொடர்ந்து கொண்டு செல்வோம்.

தென்னாபிரிக்காவு க்கு எதிரான போட்டிகளில் வேகப்பந்து வீச்சில் அசத்தியது. இந்திய அணிக்கு மிகப் பெரிய நம்பிக்கையை அளித்துள்ளது என்றார். (க)

# காசநோய் விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி அரையிறுதிக்குத் தெரிவானது ஞானம்ஸ்

யாழ்ப்பாணம் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தினரால் உலக காசநோய் தினம் 2018 ஐ முன்னிட்டு காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உள்ளூர் கழகங்கள், திணைக்கள கழகங்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட 9 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் காலை கோப்பாய் ஞான பாஸ்கரோதய சங்க விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. அமிர்தராஜா திலீபன் கலந்து கொண்டு போட்டி





களை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

52 அணிகள் பங்குபற்றும் இப்போட்டி 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முதலாவது குழுக்கான போட்டிகள் நடைபெற்றது.

இக்குழுவில் 13 அணிகள் பங்குபற்றின. இப் போட்டிகளில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

ஏனைய போட்டிகள் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் நடைபெறும். (க)

## முஸ்லிம் வர்த்தகர்...

பிரபல பாதணிகள் உற்பத்தி நிறுவனங்களின் வர்த்தகரான, காத்தான்குடி நகர், மீன்பிடி இலாகா வீதி, மனேஜர் ஒழுங்கையை சேர்ந்த ஏ.எல்.எம்.முஹம்மது முபாறக் (வயது 35) என்ற வர்த்தகரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தகர் நேற்றுமுன்தினம் இரவு மஞ்சந்தொடுவாயிலுள்ள தனது தொழிற்சாலையிலிருந்து வெளியேறி அருகிலிருந்த உணவகத்தில் தேநீர் அருந்தி விட்டு வெளியேறும்போதே இரவு 7.30 மணியளவில் காணாமல் போயுள்ளார்.

அவர் கடைசியாக அந்த உணவகத்திலிருந்து வெளியேறியபோது பதிவான சி.சி.டி.வி காணொளியை வைத்து, விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் கல்லடிப் பகுதி வாவியிலிருந்து குறித்த வர்த்தகரை சடலமாக மீட்டுள்ளனர். (மு-1)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## பிரபாகரனின்...

போது என் மனதுக்குள் இருவிதமான எண்ணங்கள் ஓடின.

முதலாவது, பிரபாகரன் கொல்லப்பட்டதை ஏன் இவ்வளவு அசிங்கப்படுத்துகிறார்கள், கொச்சைப்படுத்துகிறார்கள் என்பதும், இரண்டாவது, பிரபாகரனின் குழந்தைகள் என்ன ஆகப்போகிறதோ?, அவரின் குடும்பத்துக்கு என்ன கதி ஏற்படுமோ?, அவர்கள் மனித நேயத்துடன் நடத்தப்படுவார்களா? என்ற கவலை எனக்குள் ஏற்பட்டது என்று சிங்கப்பூரில் உள்ள ஜஐம் கல்வி நிறுவனத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி பங்கேற்றுப் பேசினார்.

அப்போது அவரிடம் உங்கள் தந்தையை கொலை செய்தவர்களை நீங்களும் உங்கள் சகோதரியும் மன்னித்து விட்டீர்களா? எனக் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ராகுல் காந்தி மேற்கண்டவாறு பதில் அளித்தார். (மு-1)

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

## இலங்கை-இந்திய உறவை...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ராஸ்திரபதி பவனில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து அங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சர்வதேச சூரிய சக்தி மாநாட்டின் செய்தியை முழு உலகிற்கும் எடுத்துச் செல்வதற்கு இணைந்து செயற்பட உதவுமாறு தெரிவித்த மோடி, கடந்த சில வருடங்களாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

அத்துடன் எதிர்காலத்திலும் இந்த உறவை பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எரிக் சொல்ஹெய்மையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

கடல் மாசடைதல் பாரிய பிரச்சினையாக மாறியிருக்கும் சூழ்நிலையில் இலங்கையில் பிளாஸ்டிக் பாவனையை குறைப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவரிடம் ஜனாதிபதி விளக்கினார்.

இதன்போது சுற்றாடல் பாதுகாப்புக்காக இலங்கை தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதிக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கில் இந்தியாவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி மாநாட்டின் ஒரு அங்கமாக இந்திய அரசின் உயர் மட்ட தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## தேங்காய் பறிக்க...

யான சுப்பையா சிவகுமார் (வயது 44) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கரவெட்டி பிரதேச சபையில் சுகாதாரத்தொழிலாளியாக கடமையாற்றி வருகிறார். விடுமுறை நாட்களில் கூலிக்கு தேங்காய் பறிப்பதற்கு சென்று வருவதை வழமையாக கொண்டுள்ளார்.

நேற்று குறித்த நபர் தேங்காய் பறிப்பதற்கு அருகில் உள்ள ஒரு வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு தென்னை மரத்தில் ஏறி மர வீட்டில் இருந்து தேங்காய் பறித்துக்கொண்டு இருந்த போது நெஞ்சு வலிப்பதாகவும் தலை சுற்றுவதாகவும் கூறி மரத்திலேயே சாய்ந்துள்ளார். ஆனால் அதிக நேரமாகியும் அவர் கீழே இறங்காத காரணத்தினால் வேறொருவர் மேலே ஏறி பார்த்த போது அவர் அசைவின்றி காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அங்குள்ளவர்கள் இணைந்து கயிறு கட்டி அவரை கீழே இறக்கி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த வைத்தியர்கள், குறித்த நபர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கே.இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## தேவாலயத்தில்...

தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியிலுள்ள அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற திருவிழா திருப்பலியின் பின்னர், அப்பகுதியில் உள்ள குடும்பத்தினரால், திருவிழாவில் கலந்துகொண்டவர்களுக்கு உணவு (குழை சாதம்) வழங்கப்பட்டுள்ளது.

குறித்த உணவை உட்கொண்ட அப் பகுதி மக்களில் சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்கள் அன்று இரவு வயிற்றோட்டம் மற்றும் வாந்தியால் பாதிக்கப்பட்டு உடனடியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை வரை 108 பேர் வைத்திய சாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதுடன் கர்ப்பிணி பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் 37 பேர் வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெற்று சென்றுள்ளனர்.

மேற்படி தேவாலயத்தில் வழங்கப்பட்ட உணவு வெளியில் இருந்து சமைத்துவரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அதில் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாக இந்த ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும், பாரதூரமான எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும் குறித்த உணவில் எவ்வாறு நச்சுத்தன்மை ஏற்பட்டது என்பது தொடர்பாக அறிவதற்கு உணவின் மாதிரி எடுத்து ஆய்வுக்கு அனுப்பியுள்ளதாகவும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த உணவில் எண்ணைத் தன்மை அதிகமாக காணப்பட்டதாகவும் காலாவதியான பொருட்கள் மூலம் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் சுகாதாரத்துறையினர் இது தொடர்பாக அனைத்து விற்பனை நிலையங்களிலும் சோதனை மேற்கொள்வதுடன் மேலும் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் ஜே.மஞ்சுளாதேவி நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன் குறித்த விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (மு-9)

## ராஜபக்ஷக்களுக்கு...

அரசாங்க அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன போன்ற சிலர் அரசாங்கத்தின் வங்குரோத்து நிலையை மூடி மறைப்பதற்கு ஒருவருக்கு ஒருவர் விரல் நீட்டிக் கொண்டு இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். (மு-1)

## தொடரும் தாக்குதல்...

முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான வீடொன்றின் மீதுமே இந்த குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவங்களின் போது எவருக்கும் ஆபத்துக்கள் நேராத போதும் ஹோட்டலும், வீடும் முற்றாக தீக்கிரையாகி கடும் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர். (மு-1)

## சீன ஜனாதிபதியாக...

மக்கள் காங்கிரஸ் நீக்கியுள்ளது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் மூலம் தற்போதைய சீன ஜனாதிபதியாக ஷி ஜின்பிங் வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக நீடிப்பதற்கான வழிவகை ஏற்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமையன்று நடந்த தேசிய மக்கள் காங்கிரஸின் ஆண்டு கூட்டத்தின்போது அரசமைப்புச் சட்டத்தில் இதற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒருவர் இரண்டு முறை மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியுமென்ற விதியை சீனா 1990 களிலிருந்து கடைப்பிடித்து வருகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டின்போது அடுத்த ஜனாதிபதியின் பெயரை முன்மொழியும் நடைமுறையை தற்போதைய சீன ஜனாதிபதியான ஷி ஜின்பிங் தவிர்த்தார்.

மாறாக, ஷி ஜின்பிங்கின் பெயரையும், கொள்கையையும் கட்சியின் அமைப்புச் சட்டத்தில் இடம் பெறச் செய்யும் முடிவுக்கு கட்சி மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் மூலம் தமது அரசியல் அதிகாரத்தை நிலை பெறச் செய்த ஷி, கட்சி நிறுவனரான மா சேதுங்குக்கு இணையான நிலைக்கு தம்மை உயர்த்திக்கொண்டார்.

ஷி ஜின்பிங்கின் பதவிக்காலம் வரும் 2023ஆம் ஆண்டு முடிவடையவுள்ள நிலையில், ஜனாதிபதிக்கான பதவிக்கால வரம்புகளை அரசமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று பெப்ரவரியில் கம்யூனிஸ்ட் கட்சி முன்மொழிந்தது.

மற்ற நாடுகளின் நாடாளுமன்றங்களை போன்று சீன மக்கள் குடியரசின் மிக உயர்ந்த அவையாக தேசிய மக்கள் காங்கிரஸ் உள்ளது. (மு-1)

## ஜனாதிபதித் தேர்தலில்...

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சகோதரர்கள் (மகிந்த, பசில்) இணங்கினால், 2020 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார் என்று முன்னர் கூறியிருந்தீர்கள், இப்போது அதற்கான இணக்கத்தைப் பெற்று விட்டீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ,

“நாங்கள் இதுபற்றி இன்னமும் ஒன்றாக அமர்ந்து கலந்துரையாடவில்லை. அதற்கு இன்னமும் நேரம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

2020 ஜனாதிபதி தேர்தல் குறித்து இப்போது கலந்துரையாடுவது, மிகவும் முற்கூட்டிய நடவடிக்கையாக இருக்கும்.

சரியான நேரம் வரும் போது, மகிந்த ராஜபக்ஷ ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வருவார் என்று தெரிவித்துள்ளார்.

2020 ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நீங்களே போட்டியிடுவீர்கள் என்று விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, மகிந்தானந்த அளுத்கமகே போன்றவர்கள் கூறிவருகிறார்கள். உங்களின் அனுமதியுடன் தான் அவர்கள் அதனைக் கூறுகிறார்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ,

“இல்லை. அது அவர்களின் தனிப்பட்ட கருத்து. இவர்கள் மாத்திரமன்றி வேறு பலரும் அவ்வாறு கூறுகிறார்கள்.

ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தும் போது எந்தவொரு அரசியல் கட்சியும், நாட்டின் அரசியல் சூழலைக் கவனத்தில் எடுக்கும் என்று நான் நினைக்கிறேன்.

குறித்த கட்சி அல்லது குழுவின் சார்பில் மிகப் பொருத்தமானவர் தான் போட்டியிடுவார். அதுபோல, இலங்கையின் இறைமை மீது நம்பிக்கை கொண்டுள்ள எமது பிரிவு மக்கள், தமது ஜனாதிபதி வேட்பாளராக மிக பொருத்தமான ஒருவரைத் தான் முடிவு செய்வார்கள் என்று கூறியுள்ளார்.(மு-1)

## அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க போராட்டத்தை தீவிரப்படுத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க போராட்டம் இன்று முதல் தீவிரப்படுத்தவுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடு முழுவதிலுமுள்ள போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த மருத்துவ பீடங்களில் வழங்கி வரும் சேவைகள் திங்கட்கிழமை முதல் முடிவுக்கு கொண்டுவரப்படுவதென்றும், நாளை மறுதினம் 14.03.2018 புதன்கிழமை நண்பகல் முதல் பல்கலைக்கழக பீடங்களில் இடம்பெற்று வந்த நீர்வழங்கல் பராமரிப்பு, மின்சாரப்பராமரிப்பு பணிகளும் இடைநிறுத்தப்படும் எனவும் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சகல போதனைசாரா ஊழியர்களையும் இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கம் அறிவித்துள்ளது.(மு-9)

## யாழ்-குருசடித்தீவு...

ந்த உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு நேற்று முன்தினமும் நேற்றும் சிரமதானப்பணிகள் இடம்பெற்றது.

நேற்று பகல் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டிருந்த போது, அந்த பகுதியில் இருந்த மலசல கூடத்துக்கு அருகில் இந்த குண்டுகளை கண்டுள்ளனர். இது நேற்றைய தினமே அப்பகுதியில் போடப்பட்டுள்ளதாக அங்கிருந்தவர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

உடனடியாக அருகில் இருந்த இராணுவத்தினருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்து குறித்த குண்டுகளை மீட்டுச் சென்றுள்ளனர். (மு-9)

## இனவாதத்தை...

ரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக இராணுவத்தினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பல்வேறு தரப்பினரின் அற்ப நோக்கங்களுக்காக நாட்டின் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பலிகொடுக்க அரசாங்கம் தயாரில்லை எனவும் இவ்வாறான அற்ப நோக்கங்களுக்காக செயற்படுபவர்களுக்கு எதிராக உயர்ந்த பட்ச அதிகாரத்தைப் பயன்படுத்த இராணுவம் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் இடம்பெற்ற சம்பவத்துடன் பல்வேறு பெயர்களில் தோன்றிய இனவாத இயக்கங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்கள் வைபர், வட்ஸ்அப், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாக திட்டமிட்ட வகையில் செயற்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தேவையான உயர்ந்த பட்ச அதிகாரத்தை அவர்களுக்கு எதிராக பயன்படுத்துவதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## கண்டி சம்பவம்...

பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என கூறிய பிரதமர், எதிர்வரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார். (மு-1)

## விற்பனைக்கு

அச்சுவேலி பத்தமேனி பழைய டச்சு வீதியில் (காத்தாடி வளவு) தோட்டக் காணி 27 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: க.ஞா.சம்பந்தபிள்ளை - 0779533226

(3142)

## விற்பனைக்கு

தரமான ஸ்டார் ஓடு விலை - 55/=

தரமான கொங்கிறீற் கல்லு விலை - 39/=

தொடர்பு : 077 416 3146

ஆனந்தகோம்ஸ் கோண்டாவில்

(3198)

## வெளிவந்து விட்டது

முன்பள்ளி ஆசிரியர் தரம் III போட்டிப்பரீட்சை வழிகாட்டி - 2018 வலையின் விசேடவெளியீடு

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல.04, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் - T.P : 021 222 6693

(C-1854)

**A/L**

தொழில்நுட்பப்பிரிவு

A/L 2018 இல் பரீட்சைக்கு தோற்றும்

மாணவர்களுக்குரிய விசேட வகுப்புக்கள் ஆரம்பம்

திங்கள் - வெள்ளி

காலை : 8.00 am - 12.00

8.00 - 9.00 Civil Paper

9.00 - 12.00 வெப்ப இரசாயனம்

ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

**Techno World**

வைரவர் சந்தி (விங்கள் அம்மன் அருகாமை) யாழ்ப்பாணம்.

077 017 5346

(1856)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg

கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1828)

அறிமுகம் - Rs. 250/=

## சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1813)

## வேலைவாய்ப்பு

விஸ்தரிக்கப்பட்டு வரும் எமது Dynamic Group Companyக்கு அடிப்படைத் தகைமையான O/L, A/L உடன் தொழில் புரிய உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

» வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் பணி புரியலாம்.

» பயிற்சி, தங்குமிடம், உணவு வசதிகள்.

தொடர்பு: 0766668385

(3189)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

(C-1838)

## பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு

**துறைசார் வல்லுநர்களின் பயிற்சிப்பட்டறை (WorkShop) பங்குச்சந்தை யாழ். கிளையில்**

- பங்கு முதலீட்டு எண்ணக்கருக்கள்
- நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு
- பங்குத்தெரிவு உத்திகள்
- முதலீட்டினை ஆரம்பித்தல்

CSE COLOMBO STOCK EXCHANGE

மதிய உணவு உள்ளடங்கலாக நான்கு அமர்வுகளுக்குமான கட்டணம் ரூபா 1000.

மார்ச் 17 ஆம் & 24 ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை

பதிவுகளுக்கு மற்றும் மேலதிக தகவல்களுக்கு: 021 222 1455/ 077 782 2014, 147, 2/3, K.K.S. Road, Jaffna.

(C-1824)

HARI REAL ESTATE

A TRADITION OF TRUST



## வெற்றிப் பயணத்தை முன்னோக்கி... சக்திமிக்க அமைவிடத்தில் "ஹரி றியல் எஸ்டேட்" முகவர் நிறுவனம்

**எமது அதிநவீன யாழ்நகர்மைய அலுவலகம்... இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சந்தி அருகாமை)...எனும் புதிய முகவரியில்**

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமிக்க, வினைத்திறன்வாய்ந்த பல்வேறு சேவைகளை வழங்குவதற்கு... எமது யாழ்நகர் அலுவலகம் நீங்கள் இலகுவாக தொடர்புகொள்ள மற்றும் அணுகக்கூடிய, நகரின் பிரதான கேந்திர அமைவிடத்தில் நிறுவப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் ...

உங்களது நிலையான சொத்துக்கள் தொடர்பான அனைத்து பரிமாற்றங்களையும் மிக இலகுவாக மேற்கொள்ள நாம் உதவுகின்றோம்...

- காணி விற்பனை, கொள்வனவு
- வீடு/மனை விற்க, வாங்குவதற்கு
- நிலையான சொத்துக்கள் பராமரிப்பு
- காணி அளவீடு மற்றும் பெறுமதி மதிப்பீடு

முதலான சேவைகளுடன் உங்களது அனைத்துவித கட்டட நிர்மாண தீர்வுகளும் ஒரே கூரையின் கீழ் ...

- குறைந்த கட்டணத்துடனான சொத்து பரிமாற்ற சேவைகள்
- வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவான சேவைகள்
- தேவையற்ற அலைச்சல்களுக்கு முற்றுப்புள்ளி
- விஸ்தரிக்கப்பட்ட வலையமைப்பு மற்றும் அதிகளவு தெரிவுகள்

இவை அனைத்திற்கும் தீர்வுகாண சிறந்த மற்றும் நம்பிக்கையான எமது முகவர் நிறுவனத்தினை நாடுங்கள் . . . . .

**HARI REAL ESTATE ... நம்பிக்கையின் பாரம்பரியம்**

**இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சந்தி அருகாமை)**

தொலைபேசி +94 21 221 4422 மொபைல் +94 70 300 4000

முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

(C-1851)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.